
விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 062 வள்ளுவர் ஆண்டு 2057 மாசி 07 வியாழக்கிழமை (19.02.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## யாழ்.பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 40ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா இன்று வியாழக்கிழமை முதல் எதிர் வரும் 22ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை வரை இடம் பெறவுள்ளது.

பட்டமளிப்பு விழா நான்கு நாட்கள் பன்னிரண்டு அமர்வு களாகப் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங் கில் நடைபெறவுள்ளது.

இம்முறை பட்டமளிப்பு விழாவின்போது, 376 பட் டப்பின் தகைமை பெற்ற வர்களுக்கும் 2557 உள் வாரி மாணவர்களுக்கும் 252 வெளிவாரி மாணவர்

15ஆம் பக்கம் பார்க்க

## பயங்கரவாதச் சட்டத்தை நீக்குக

### யாழ்.பல்கலைக்கழகத்துக்கு முன்னால் 4 நாட்கள் கையெழுத்துப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டும். பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் புதிய சட்டவரைபு மீளப் பெற வேண்டும். எந்தவொரு புதிய பயங்கரவாதத் தடுப் புச் சட்டமும் கொண்டு வரப் பட வேண்டாம் என்பதை வலியுறுத்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு முன்னால் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக் கப்படவுள்ளது.

இன்று வியாழக்கிழமை முதல் எதிர்வரும் ஞாயிற் றுக்கிழமை வரை காலை 8.30 மணி முதல் மாலை 4 மணிவரை குறித்த போராட்

02ஆம் பக்கம் பார்க்க


## நல்லிணக்கத்தை நிலைநாட்ட தமிழர்களுடன் துணை நிற்போம்

### தமிழ்த் தேசியக் கட்சிப் பிரதிநிதிகளிடம் பிரிட்டன் பிரதிப் பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

இன நல்லிணக்கத்தை நிலை நாட்ட தமி ழர்களுடன் பிரிட்டன் என் றுமே துணை நிற்கும் என்று தமிழ்த் தேசியக் கட்சிப் பிரதிநிதிகளிடம் பிரிட் டன் பிரதிப் பிரதமர் தெரி வித்தார்.

(02ஆம் பக்கம் பார்க்க)



## வடக்கு பேருந்துகளில் ஜி.பி.எஸ், சி.சி.ரி.வி

(மன்னார்)

வடக்கு மாகாணத்தில் பேருந்துகளில் ஜி.பி.எஸ் மற்றும் சி.சி.ரி.வி கமராக்களைப் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்கு வரத்து அதிகார சபை

15ஆம் பக்கம் பார்க்க

## கந்துவட்டியின் கொடுமையால் சிறுநீரகத்தை விற்ற முன்னாள் போராளி

(மன்னார்)

யுத்த களத்தில் காயப்பட்டு, ஒரு கால் முழுவதும் பாதிக்கப்பட்டு, இன்று வாழ்வா தாரத்திற்காகப் போராடிக்கொண்டிருக்கும் ஒரு முன்னாள் பெண் போராளி

02ஆம் பக்கம் பார்க்க

## சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் மண்டைதீவில் கிரிக்கெட் மைதானம்

### யாழ்.மாவட்டச் செயலகத்தில் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகை யில் மண்டைதீவில் கிரிக் கெட் மைதானம் அமைக் கப்படும் என யாழ்.மாவட்டச்

15ஆம் பக்கம் பார்க்க

## ஐ.எம்.எப் பணிப்பாளர் பிரதமர் ஹரிணியுடன் சந்திப்பு



15ஆம் பக்கம் பார்க்க

## மோடியின் விருந்தில் அநுர



(டில்லி)

இந்தியாவில் இடம் பெறும் செயற்கை நுண்ண றிவு உச்சி மாநாட்டில் பங் கேற்பதற்காக இந்தியா சென்றுள்ள ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நேற்றிரவு பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அளித்த விசேட விருந்துபசாரத்தில் கலந்து

02ஆம் பக்கம் பார்க்க

## மதுப் போத்தலை உடைத்து மனைவி மீது சரமாரியாகக் குத்து

(கரணவாய்)

மதுப் போத்தலை உடைத்து மனைவி மீது சரமாரியாகக் குத்திப் படு காயங்களுக்குள்ளாக்கிய சம்பவம் ஒன்று நாகர் கோவில் பகுதியில் நேற்று

15ஆம் பக்கம் பார்க்க

## பிரஜா சக்திக்கு எதிராக வேலணை பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

பிரஜா சக்திக்கு எதிராக வேலணைப் பிரதேச சபை யில் தீர்மானம் ஒன்று நிறை வேற்றப்பட்டுள்ளது.

வேலணைப் பிரதேசத் தின் மாதாந்த அமர்வு நேற்று தவிசாளர் சிவலிங்கம் அசோக்குமார் தலைமை யில் நடைபெற்றது.

இதன்போது பிரதேசத் தின் பல்வேறு பிரச்சினை கள் சபையின் உறுப்பினர் களால்

15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாது நடக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய் படுகொலை 3 வது சந்தேக நபர் கைது

யாழ்ப்பாணத்தில் காணிப் பிரச்சினை ஒன்றில் ஒருவர் அடித்துக்கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய மூன்றாவது நபரையும் பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

கோப்பாய் கல்வியியல் கல்லூரிக்கு அருகில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற குறித்த கொலைச் சம்பவத்தில் அப்பகுதியைச் சேர்ந்த செல்லத்துரை செல்வரஞ்சன் (வயது-59) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மூவர் இணைந்து தாக்குதலை மேற்கொண்டதில் அந்நபர் உயிரிழந்துள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்த நிலையில் அன்றைய தினமே சந்தேக நபர் ஒருவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் ஏனைய இருவர் தொடர்பிலும் தகவல்களை பொலிஸார் பெற்ற நிலையில் மறுநாள் மற்றைய சந்தேக நபரையும் பொலிஸார் கைது செய்தனர்.

இந்நிலையில் மூன்றாவது சந்தேக நபர் கைதடிப் பகுதியில்மறைந்திருப்பதாக பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த நபரை நேற்று புதன்கிழமை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரை கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வரும் நிலையில் இன்று வியாழக்கிழமை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.(ம-7,33)

# புன்னாலைக்கட்டுவனில் மோ.சைக்கிள் விபத்து

## குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவனில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் சுன்னாகத்தைச் சேர்ந்த சுந்தரலிங்கம் சுகிர்தர் (வயது -48) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

இவர் கடந்த 14 ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டு சிகிச்சை பலனின்றி கடந்த திங்கட்கிழமை (16) இரவு உயிரிழந்தார்.

இம் மரணம் தொடர்பில் யாழ்.போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார்.(ம-7,60)

# யாழ்.விமான நிலைய எதிர்கால அபிவிருத்தி

## அமைச்சர் கருணாதிலக்க கள விஜயம்

யாழ்ப்பாணம் பலாலி சர்வதேச விமான நிலையத்தின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது தொடர்பான விசேட கள ஆய்வு மற்றும் கண்காணிப்பு விஜயமானது துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அநுர கருணாதிலக்க தலைமையில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் இடம்பெறவுள்ளது.

இந்த விஜயத்தில் சிவில் விமானப் போக்குவரத்து பிரதி அமைச்சர் ஜனிதருவான் கொடித்துவக்கு மற்றும் அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகள்பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தக் கண்காணிப்புச் சுற்றுப்பயணத்தின் போது, தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் முதற்கட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்தும் எதிர்காலத்திட்டங்களுக்கான கால எல்லைகள் குறித்தும் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ம-க,7)

# பேருந்து விபத்து; 20 பேர் காயம்

(அம்பாந்தோட்டை)

அம்பாந்தோட்டை, பல்லேமலல பகுதியில் நேற்று மதியம் இடம்பெற்ற பேருந்து விபத்தில் 20 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காலி மற்றும் தெஹியத்தக்கண்டிய இடையே பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தும் திஸ்ஸமஹாராம மற்றும் மாத்தறை இடையே பயணித்த தனியார் பேருந்தும் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளதாக அம்பாந்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## சிறுநீரகத்தை...

கந்துவட்டிக் கொடுமையால் தனது சிறுநீரகத்தை விற்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ள சம்பவம் மன்னாரில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மன்னார், மூர் வீதிப் பகுதியில் வசிக்கும் இப் பெண்மணி, தனது குடும்ப வறுமையைப் போக்கவும், சிறு தொழில் செய்யவும் "சீட்டு" (Siddu) முறையில் பணம் கட்டியுள்ளார்.

ஆனால், சீட்டு ஆரம்பத்தின் கனிவாக நடந்து கொண்ட பெண் குழுக்கள் மற்றும் வட்டி கும்பல்கள் காலம் செல்ல செல்ல வட்டிக்கு மேல் வட்டி போட்டு, அவரை மீள முடியாத கடன் சுமைக்குள் தள்ளியுள்ளனர்.

தொடர் மிரட்டல்கள், அவமானங்கள் மற்றும் பணத்தை தராவிட்டால் கொலை செய்து விடுவோம் என்ற அச்சுறுத்தல்களுக்குப் பயந்து, வேறு வழியின்றி கொழும்புக்குச் சென்று தனது ஒரு சிறுநீரகத்தை குறைந்த விலைக்கு விற்று அந்தப் பணத்தை வட்டிப் பணத்துக்காக வழங்கியுள்ளார்.

சிறுநீரகத்தை விற்று பணத் தொகையைக் கொடுத்த பின்னரும் அந்த வட்டிக் கும்பல் இன்னும் வட்டி மீதமுள்ளது எனக் கூறி அவரைத் தொடர்ந்து துன்புறுத்தி வருகின்றது.

உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள இப்பெண்மணி, தற்போது தற்கொலை எண்ணம் தோன்றும் அளவிற்கு விரக்தியில் உள்ளதாகக் கண்ணீர் மல்க தெரிவித்தார். (ம-7,285)

## நல்லிணக்...

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட பிரித்தானிய பிரதிப் பிரதமர் டேவிட் லம்மி மற்றும் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஆண்ட்ரூ பேட்ரிக் ஆகியோருக்கும் தமிழ் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது.

மேற்படி கலந்துரையாடலில் நல்லிணக்கம், நீதி மற்றும் தமிழ் சமூகங்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகள் குறித்துக் கவனம் செலுத்தப்பட்டது.

அர்த்தமுள்ள முன்னேற்றத்திற்கு ஆதரவளிக்கவும், நீதி மற்றும் சமத்துவத்தை ஊக்குவிக்கவும், தமிழ் பிரதிநிதிகளின் குரலைத் தொடர்ந்து ஒலிக்கச் செய்யவும் ஐக்கிய இராச்சியம் உறுதியாக இருப்பதாக இதன் போது தெரிவிக்கப்பட்டது.

ஈழத்தமிழர்கள் எதிர்கொள்ளும் தேசிய இனப் பிரச்சினை மற்றும் அதற்கான தீர்வுத் திட்டங்கள் குறித்து இந்தச் சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது. அத்துடன் இனநல்லிணக்கம் மற்றும் நீதியை நிலைநாட்டும் விடயங்களில் தமிழர்களுடன் ஐக்கிய இராச்சியம் எப்போதும் துணைநிற்கும் என உறுதியளிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வம் அடைக்கலநாதன், இராசமாணிக்கம் சாணக்கியன் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-7,316)

## பயங்கரவாதச்...

டம் இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மற்றும் பல்லைக்கழக மாணவர் ஒன்றியம் ஆகியன ஒன்றிணைந்து குறித்த கையெழுத்துப் போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ளன. (ம-7)







## மோடி...

கொண்டார்.

இதன் போது பாரதப் பிரதமர் மோடி ஜனாதிபதி அநுரவைக் கைகுலுக்கி வரவேற்றிருந்தார்.

இவ்விருந்துபசாரத்தில் உலக நாடுகளின் தலைவர்கள் பலரும் பங்கேற்றிருந்தது டன் இந்தியாவின் பாரம்பரிய கலை கலாசார நிகழ்வுகளும் கண்டு களித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடகமும் அரங்கியலும் முழுநாள் பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத் தின் ஏற்பாட்டில் க.பொ.த உயர் தரப் பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் செய் முறைப் பரீட்சைக்குத் தோற் றவுள்ள மாணவர்களுக்கான முழுநாள் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை இல. 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத் தில் அமைந்துள்ள மன்றத் தின் 'கலைத்தூது கலையக' மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இப் பயிற்சிப் பட்டறையில் பங்குபற்ற விரும்பும் மாண வர்கள் தமது பெயர், விபரங் களை யாழ்.திருமறைக் கலா மன்ற அலுவலகத்தில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

மேலதிக விபரங்க ளுக்கு021 222 2393, 077 669 2657, 077 639 3620 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம். (8)

## காசோலை வழங்கல்

(பச்சிலைப்பள்ளி)

டித்வா புயலினால் பச்சி லைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் பாதிக்கப்பட்ட 6 சுய தொழில் முயற்சியாளர்களுக்கு மாவட்ட அனர்த்த முகாமைத் துவ பிரிவினூடாக 2 இலட்சம் ரூபாய் பெறுமதியான நஷ்ட ஈட்டுக்குரிய காசோலை வழங்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் தலைமையில் கடந்த திங்கட்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடை பெற்றது. (8)

### வட மாகாணத்தில்

# விதி மீறும் சாரதிகள் குறித்து பொதுமக்கள் முறையிடலாம்

### போக்குவரத்து அதிகாரசபை

**(யாழ்ப்பாணம்)——————— வடமாகாணத்தில் பயணிகள் போக்குவரத்துச் சேவை விதிமுறைகளை மீறி, வாகனம் செலுத்தும் சாரதிகள் தொடர்பில் 071 909 0900 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு ஆதாரங்களுடன் முறைப்பாடு செய்யலாம் என வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் பொறியியலாளர் எஸ்.விமலேஸ்வரன் தெரி வித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

இலங்கை போக்குவரத்துச் சபையின் வவுனியாச் சாலை யைச் சேர்ந்த சாரதி ஒருவர், பேருந்தைச் செலுத்திக் கொண் டிருக்கும்போது கைப்பேசியைப் பயன்படுத்தியமை தொடர்பில் எமக்கு ஆதாரத்துடன் முறைப்பாடு கிடைக்கப் பெற்றது.

பயணிகளின் பாதுகாப் பைக் கேள்விக்குறியாக்கும் இச்செயற்பாடு தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய முகாமை யாளருக்குப் பணிப்புரை விடுக் கப்பட்டது.

அதற்கமைய, சம்பந்தப்பட்ட சாரதிக்கு 3 நாட்கள் கட்டாய "மீட்டல் பயிற்சி" வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு ள்ளது.

தனியார் பேருந்தாகவோ அல்லது அரச பேருந்தாகவோ இருப்பினும், பயணிகள் போக் குவரத்துச் சேவை விதிமுறை களை மீறிச் செயற்படும் சாரதி கள் தொடர்பில் பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்.

சாரதிகள் வாகனம் செலு த்தும்போது கைப்பேசி பேசுதல், அதிவேகமாகச் செலுத்துதல் அல்லது கவனயீனமாகச் செய ற்படுதல் போன்ற விதிமீறல் களில் ஈடுபட்டால், அதனை ஒளிப்படம் அல்லது காணொ ளியாக எடுத்து 071909 0900 என்ற தொலை பேசி இலக்கத் துக்கு வட்ஸ்அப் ஊடாக ஆதா ரங்களுடன் அனுப்பி வைக்க முடியும்.

அவ்வாறு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் மீது எவ்வித பாரபட்சமுமின்றித் துரித நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார். (8)

## புண்ணிய நாச்சியம்மையார் குருபூசைதினம் இன்று

(யாழ்ப்பாணம்)

சைவபரிபாலன சபையால் நடாத்தப்படவுள்ள புண்ணிய நாச்சியம்மையார் குருபூசை தினமும் சைவநெறித் தேர்வு பரிசளிப்பு விழா நிகழ்வும் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு இல. 66, கல்லூரி வீதியில் அமைந் துள்ள நாவலர் ஆச்சிரம மண் டபத்தில் நடைபெறவுள்ளது.

சபை உறுப்பினர்கள், சைவ அன்பர்கள் மற்றும் ஆர் வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நிர் வாகத்தினர் கேட்டுக் கொண் டுள்ளனர். (8)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நாரந்தனை தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய சைவ மகாசபையின் 75 ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் ஆலய மண்டபத்தில் சபைத் தலைவர் சு.இராமலிங்கம் தலைமையில் நடைபெற வுள்ளது.

எனவே சபை அங்கத் தவர்கள், திருவிழா உபய கார்கள், அடியவர்கள் அனைவரையும் கூட்டத்தில் பங்குபற்றுமாறு செயலாளர் கோ.கருணாகரன் அறிவித் துள்ளார். (8)

### புளியம்பொக்கணை நாகதம்பிரான்

# ஆலய பொங்கல்விழா

(கண்டாவளை)

**கிளிநொச்சி மாவட்டத் தின் வரலாற்றுத் தொன்மை கொண்ட கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக் கணை நாகதம்பிரான் ஆலயத்தினுடைய வரு டாந்த பங்குனி உத்தரப் பொங்கல் விழா எதிர்வரும் 25 ஆம் திகதி விளக்கு வைத்தலுடன் ஆரம்பமாகி ஏப்ரல் 01ஆம் திகதி பொங்கல் விழா நடை பெறவுள்ளது.**

குறித்த ஆலய பொங்கல் ஏற்பாடுகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய பூசை வழிபாடுகளை தொடர்ந்து ஆலய முன் றலில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுப்பிர மணியம் முரளிதரன் தலை மையில் நடைபெறவுள்ளது

இதில் திணைக்களங்க ளின் தலைவர்கள் மற்றும் ஆலய தொண்டர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (8-315)

# கொடிய அடக்குமுறைச் சட்டத்தை கொண்டுவரும் அநுர அரசு

### ஜனநாயக போராளிகள் கட்சித்தலைவர் வேந்தன்



(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குவதாகக்கூறி, தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அதனிலும் கொடிய அடக்கு முறைச் சட்டத்தை கொண்டுவர முயற்சிக்கிறது என ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் குற்றம் சாட்டியுள்ளார்.

இச் சட்டமூலம் கருத்துச் சுதந்திரம் மற்றும் மக்களின் அடிப்படை உரிமைகளை பறிக்கும் செயற்பாடாகும்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் நிறைவேற்றப்பட்ட காலத்தில் இருந்து அதிகமாக தமிழ் மக் களே அந்த பிடியில் அழுத்தப் பட்டு தண்டனை அனுபவித்து வருகின்றனர்.

குறிப்பாக முன்னாள் போரா ளிகள், சமூக செயற்பாட்டாளர் கள், ஊடகவியலாளர்கள், மதத் தலைவர்கள் என கூறிக் கொண்டே போகலாம். இதனை ஓர் இனத்தின் மீது ஆயுதம் ஏந்தாமல் கட்டவிழ்த்து விடப்பட்ட ஒரு வன்முறை என கருதியே பல பொது அமைப்புகளின் கோரிக்கை மற்றும் உலக நாடுகளின் அழுத்தம் காரணமாக இந்த புதிய சட்ட கோர்வை கொண்டு வரப்பட்டுள்ளது.

ஆனால் பல மடங்கு மோச மாக இந்த சட்ட கோர்வை காணப்படுகிறது. முக்கியமாக சட்டத்தின் பெயரில் கருத்து சுதந்திரத்தை முற்றாக அழித்து ஒரு சர்வதிகார போக்கை திணிப்பதே இதன் அடிப்படை நோக்கம் ஆகும்.

தமிழ் மக்களுக்கு எந்த பயங்கரவாத தடுப்பு சட்டமும் தேவையில்லை என அவர் தெரிவித்தார். (8-60)

# வீதி புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மகி ழங்கேணி-லிகோரியார் இணைப்பு வீதி காப்பெற் வீதியாக புனரமைக்கப்பட்டுள் ளது.

தென்மராட்சிப் பிரதேச செய லகத்திற்கு புதிதாக நியமிக் கப்பட்டுள்ள பிரதேச செயலாளர் சத்தியசோதியிடம் கோவிற் **குடியிருப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் நேரடியாக விடுத்த** கோரிக்கையின் பயனாக 300 மீற்றர் நீளமான குறித்த இணைப்பு வீதி புனரமைக் கப்பட்டுள்ளது.

மேற்படி இணைப்பு வீதியை புனரமைப்புச் செய்ய வேண்டும் என கிராம மக்கள் நீண்ட காலமாக கோரிக்கை விடுத்து வந்த நிலையில் மக்களின் தேவைப்பாடு கருதி **குறித்த வீதி புனரமைக்கப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக் கது.** (8-30)

# திருக்கேதீஸ்வர ஆலயத்தில் கலாசார மண்டபம் திறப்பு



**(மன்னார்) மன்னார் திருக்கேதீஸ் வர ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்ட அன்ன** பூரணி கலாசார மண்டபம் கடந்த சனிக்கிழமை மாலை வைபவ ரீதியாக திறந்து வைக் கப்பட்டது. குறித்த மண்டபத்தை அகில இலங்கை இந்து மாமன் றத்தின் தலைவர் அபிராமி கைலாச பிள்ளை கலந்து கொண்டு திறந்து வைத் தார்.

நிகழ்வில் திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணி சபை தலை வர், செயலாளர், பொருளாளர், உறுப்பினர்கள், பாடசாலை மாணவர்கள், **பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டி ருந்தனர்.** (8-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## கிளிநொச்சி மாவட்ட கரப்பந்தாட்ட போட்டி

# பெண்கள் பிரிவில் சம்பியனானது பளை விளையாட்டுக்கழகம்



கிளிநொச்சி மாவட்ட கரப் பந்தாட்ட சங்கம் நடத்திய 2026 ஆம் ஆண்டுக்கான கரப்பந்தாட்ட போட்டியில் பெண்கள் பிரிவில் பளை அதிசயம் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட கரப் பந்தாட்ட சங்கம் பதிவு செய்யப் பட்ட கழகங்களுக்கிடையிலான கரப்பந்தாட்ட சுற்றுத் தொடர் போட்டியினை நடத்தியிருந்த னர்.

குறித்த போட்டியின் இறுதிப் போட்டி கிளிநொச்சி உள்ளக விளையாட்டு அரங்கில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் பளை அதி சயம் விளையாட்டுக்கழகமும் பாரதிபுரம் ஆதவன் விளை யாட்டுக்கழக மும் மோதியிருந் தன.

பளை அதிசயம் விளையாட்டுக் கழகம் 2:0 என்ற கணக்கில் ஆதவன் விளையாட்டுக்கழ கத்தை வீழ்த்தி வெற்றி பெற் றது. (3)









உடுவில் மகளிர் கல்லூரியின் இல்ல திறனாய்வு போட்டியில் அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட அஞ்சல் ஓட்ட நிகழ்வில் ஆண்கள் பிரிவில் சென்.ஜோன்ஸ் கல்லூரி முதலாம் இடத்தையும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி இரண்டாமிடத்தையும், யாழ்ப்பாணக்கல்லூரி மூன்றாமிடத்தையும் தனதாக்கியது.

அத்துடன் பெண்கள் பிரிவில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி முதலாம் இடத்தையும், யாழ்ப்பாணக்கல்லூரி இரண்டாம் இடத்தையும், மானிப்பாய் மகளிர்கல்லூரி மூன்றாம் இடத்தையும் தனதாக் கியது.

# உலகக் கிண்ண ரி-20 தொடரிலிருந்து வெளியேறியது அவுஸ்திரேலியா





ஐ.சி.சி ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் குழுநிலைப் போட்டிகளின் முடிவில், அவுஸ் திரேலிய அணி தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளது.

இலங்கை மற்றும் சிம்பாப்வே அணிகளின் போட்டி முடிவு களின் அடிப்படையில், அடுத்த சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பை அவுஸ்திரேலியா இழந்துள் ளது.

குழு "B"இல் நேற்று முன்தினம் நடைபெறவிருந்த அயர்லாந்து மற்றும் சிம்பாப்வே அணி களுக்கிடையிலான போட்டி மழை காரணமாக கைவிடப்பட்ட நிலை யில், குறித்த இரு அணிகளுக்கும் தலா ஒவ்வொரு புள்ளி வழங் கப்பட்டது.

இதற்கமைய 5 புள்ளிகளுடன் சிம்பாப்வே அணி சுப்பர் 8 சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

முன்னாள் உலகச் சம்பி யனான அவுஸ்திரேலியா, லீக் சுற்றிலேயே வெளியேறியது கிரிக் கெட் ரசிகர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தநிலையில் தென்னா பிரிக்கா, இலங்கை, இந்தியா, இங்கிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள், நியூசிலாந்து, சிம்பாப்வே ஆகிய அணிகள் இதுவரையில் சுப்பர் 8 சுற்றுக்கு தகுதி பெற் றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

# இலங்கை அணிக்கு தொடரும் சிக்கல்; ரி-20 தொடரிலிருந்து விலகும் மதீஷ





இடது காலின் தொடைப் பகுதி யில் ஏற்பட்ட காயம் காரணமாக, நட்சத்திர வேகப்பந்து வீச்சாளர் மதீஷ பத்திரன 2026 ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் எஞ்சிய போட்டிகளில் விளை யாடுவது கேள்விக்குறியா கியுள்ளது.

இந்நிலையில், அவருக்குப் பதிலாக அணியில் இணைக் கப்படவுள்ள வீரர் குறித்து கிரிக்கெட் வட்டாரங்களில் அதிக எதிர்பார்ப்பு நிலவுகிறது.

மதீஷவின் இடத்தைப் பூர்த்தி செய்யத் தேர்வாளர் களின் பட்டியலில் இரு வீரர்கள் முன்னிலை யில் உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக் கின்றன. அந்த வகையில் பினுரா பெர்னாண்டோ மற்றும் நுவான் துஷார ஆகியோர் பரிசீலனையில் உள்ளனர்.

இலங்கை அணி ஏற்கனவே தனது நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் வனிந்து ஹசரங்கவை காயம் காரணமாக இழந்துள்ளது. வனிந்துவுக்குப் பதிலாக துஷான் ஹேமந்த ஏற்கனவே அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தற்போது மதீஷ பத்திரனவும் காயமடைந்துள்ளமை, இறுதிச் சுற்றுப் போட்டிகளை நோக்கி நகரும் இலங்கை அணிக்கு பெரும் சவாலாக மாறியுள்ளது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கான வீட்டுத் திட்டம் நிதியுதவியை உயர்த்த அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு தரமான வீடுகளை அமைப்பதை உறுதி செய்யும் நோக்கில், குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கையை கருத்திற் கொள்ளாது, 550 சதுர அடி கொண்ட ஒரு வீட்டிற்காக வழங்கப்படும் நிதியுதவியை 2026 ஆம் ஆண்டு முதல் 2 மில்லியன் ரூபாவாக (20 இலட்சம்) அதிகரிப்பது பொருத்தமானது என வீடமைப்பு, நிர்மானத்துறை மற்றும் நீர்வழங்கல் அமைச்சினால் தீர்மானிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவிய யுத்த மோதல்கள் காரணமாக இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுக்கும் திட்டத்தின் கீழ், 2009 ஆம் ஆண்டு முதல் 2025 டிசம்பர் 31 ஆம் திகதி வரை 277,167 குடும்பங்களைச் சேர்ந்த 919,450 நபர்கள் அவர்களது சொந்தக் கிராமங்களில் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.



2026 ஜனவரி 1 ஆம் திகதி நிலவரப்படி, குறித்த மாகாணங்களில் இன்னும் சொந்தமாக வீடுகள் இல்லாத இடம் பெயர்ந்த 13,069 குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதற்கு முன்னர் அமைச்சரவையினால் இருவர் அல்லது அதற்குக் குறைவான உறுப்பினர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு (340 சதுர அடி வீடு) 9 இலட்சம் ரூபாயும் இருவருக்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு (550 சதுர அடி வீடு) 15 இலட்சம் ரூபாயும் நிதியுதவி அங்கீகரிக்கப்பட்டது.

இருப்பினும், 2026 ஜனவரி 2 ஆம் திகதி ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்ற முற்போக்கு மீளாய்வுக் கூட்டத்தின் போது, பயனாளிகள் குறைந்த வருமானம் பெறுபவர்களாக இருத்தல், கட்டடப் பொருட்கள் மற்றும் மனித உழைப்புக்கான செலவுகள் அதிகரித்துள்ளமை போன்ற காரணங்களால் வீட்டுத் திட்டத்திற்கான நிதியுதவி உயர்த்தப்பட்டது. (நி)

# அதிக வட்டி வசூலித்தால் 1935 இற்கு முறையிடுங்கள்

## மத்திய வங்கி அறிவிப்பு

(கொழும்பு)

நிர்ணயிக்கப்பட்டுள்ள வட்டி விகிதங்களை விட அதிக வட்டி விகிதத்தை வணிக வங்கிகள் வசூலித் தால், அதுகுறித்து "1935" என்ற தொலைபேசி இலக் கத்திற்கு முறைப்பாடு அளிக்க முடியும் என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

அலுவலக நேரங்களில் மேற்கண்ட இலக்கத்திற்கு தொடர்புகொண்டு முறைப்பாடுகளை செய்ய முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், எந்தவொரு வணிக வங்கியும் அதிக வட்டி வசூலித்தால், வாடிக்கையாளர்களுக்கு வேறு வங்கியைத் தேர்வு செய்யும் சுதந்திரம் இருப்பதாக வும் மத்திய வங்கி சுட்டிக் காட்டியுள்ளது. (நி)

# உலக சந்தையில்

## கச்சா எண்ணெய் விலையில் சரிவு

(கொழும்பு)

உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை கடந்த இரண்டு வாரங்களில் இல்லாத அளவிற்கு பெரும் சரிவைச் சந்தித்துள்ளது.

அமெரிக்கா மற்றும் ஈரான் நாடுகளுக்கு இடையே நிலவி வந்த அணுசக்தி தொடர்பான மோதல்கள் குறையக்கூடும் என்ற நம்பிக்கையே இந்த விலை வீழ்ச்சிக்கு முக்கியக் காரணமாகப் பார்க்கப் படுகிறது.


ஜெனீவாவில் நடைபெற்ற இரண்டாம் கட்ட மறைமுகப் பேச்சுவார்த்தையில், அணுசக்தி விவகாரம் தொடர்பான முக்கிய "வழிகாட்டும் கொள்கைகளில்" இரு நாடுகளும் ஒரு புரிதலுக்கு வந்துள்ளதாக ஈரானிய வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அரக்ச்சி தெரிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பைத் தொடர்ந்து நேற்று பிரெண்ட் கச்சா எண்ணெயின் விலை 1.8% குறைந்து 67.42 டொலராகவும், அமெரிக்காவின் WTI கச்சா எண்ணெயின் விலை 0.9% குறைந்து 62.33 டொலராகவும் சரிந்தது.

இது பெப்ரவரி மாதத் தொடக்கத்திற்குப் பிறகு பதிவான மிகக் குறைந்த விலையாகும். (நி)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3355


### சாருஜா




### அபிஷா




### தனுசன்




### விதுஷன்




### அமுதினி




### ஷெர்வின்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வீடு, காணி விற்பனையில் நிலவும் மாபியா; கட்டுப்படுத்த புதிய ஒழுங்குமுறை அமைப்பு

## அரசாங்கம் தீர்மானம்

**(கொழும்பு)**

**இலங்கையில் காணி மற்றும் வீடுகளின் விலைகள் கட்டுப்பாடின்றி அதிகரித்து வருவதைத் தடுப்பதற்கும், இந்தத் துறையில் நிலவும் விலை மாபியாக்களை ஒடுக்குவதற்கும் புதிய ஒழுங்குமுறை அமைப்பொன்றை உருவாக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

இதற்கான முதற்கட்ட நடவடிக்கைகளை காணி அமைச்சு மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து முன்னெடுக்கத் தயாராக உள்ளதாக வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகளுக்கு இணங்க, காணி மற்றும் வீட்டுத் திட்டங்களின் விலைகளைக் கண்காணிப்பதற்கான ஒரு ஒழுங்குமுறை அமைப்பு நாட்டின் எதிர்காலத்திற்கு மிக அவசியமானது என வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறை பிரதி அமைச்சர் டி.பி.சரத் தெரிவித்தார்.

முன்னதாக இது குறித்து பாராளுமன்றத்தில் உரையாற்றிய நகர அபிவிருத்தி பிரதி அமைச்சர் எரங்க குணசேகர, முறையான ஒழுங்குமுறை அமைப்பு இல்லாததால் சொத்துக்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதாகவும், இதனை ஒரு மாபியா எனக் கருதலாம் என்றும் சுட்டிக்காட்டினார்.

2022 பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் சொத்துச் சந்தையில் ஏற்பட்ட அதிரடி மாற்றங்களால், சாதாரண மக்கள் ஒரு வீட்டினை வாங்குவது எட்டாக்கனியாக மாறியுள்ளது.

2026 ஆம் ஆண்டுக்கான சர்வதேச சுட்டெண்ணின் படி, உலகிலேயே வீடு வாங்குவதற்குச் செலவு கூடிய நகரங்களின் பட்டியலில் கொழும்பு முதலிடத்தைப் பிடித்துள்ளது.

கொழும்பில் ஒரு சாதாரண அடுக்குமாடி குடியிருப்பினை வாங்குவதற்கு, ஒரு குடும்பம் தனது முழு வருமானத்தையும் எவ்வித செலவுமின்றி சுமார் 55 ஆண்டுகள் சேமிக்க வேண்டியுள்ளதாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த அசாதாரண விலை உயர்வைத் தடுத்து, சாதாரண மக்களும் வீட்டு உரிமையாளர்களாவதை உறுதிப்படுத்தவே இந்த புதிய சட்டச் சீர்திருத்தங்கள் கொண்டு வரப்படவுள்ளன. (நி)

# இலங்கை மத்திய வங்கிக்கு ஐ.எம்.எப் பணிப்பாளர்

(கொழும்பு)

மத்திய வங்கியின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா மத்திய வங்கிக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்தார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க ஐ.எம்.எப் வழங்கிய கடன் வசதி மற்றும் கடன் மறுசீரமைப்பு உதவிகளுக்காக ஆளுநர் நந்தலால் வீரசிங்க நன்றியைத் தெரிவித்தார்.

தற்போதைய ஐ.எம்.எப் திட்டத்தின் கீழ் இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்தை ஒரு "வெற்றிக் கதை" என ஜோர்ஜீவா பாராட்டியுள்ளார்.



பொருளாதார ஸ்திரத் தன்மையை மீட்டெடுப்பதில் மத்திய வங்கியின் பங்களிப்பை அங்கீகரித்த அவர், கட்டமைப்பு சீர்திருத்தங்கள் மூலம் நாடு உயர் வளர்ச்சியை எட்டும் என நம்பிக்கை தெரிவித்தார். (நி)

# பங்களாதேஷ் பிரதமர்- அமைச்சர் நளிந்த விசேட சந்திப்பு



(கொழும்பு)

பங்களாதேஷின் புதிய பிரதமர் தாரிக் ரஹ்மானுக்கும், இலங்கையின் சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவுக்கும் இடையில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் மாலை.அந் நாட்டுப் பிரதமரின் அலுவலகத்தில் நடைபெற்றுள்ளது.

இதன்போது, அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இலங்கை அரசாங்கத்தின் சார்பில் பங்களாதேஷின் புதிய பிரதமருக்குத் தமது வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

கடந்த டித்வா புயலின் போது பங்களாதேஷ் இலங்கைக்கு வழங்கிய ஒத்துழைப்பிற்கும் அவர் தமது நன்றியைத் தெரிவித்தார்.

அத்துடன், பங்களாதேஷின் சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அதிகளவில் ஈர்ப்பது, சுற்றுலாத்துறையை மேலும் மேம்படுத்துவது மற்றும் மருந்து உற்பத்தித் துறையில் முதலீட்டு வாய்ப்புகளை விரிவுபடுத்துவது தொடர்பில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்தும் இதன் போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. (நி)

# ஓய்வூதியம் நிறுத்தம்; கோரிக்கை விடுத்தால் நிவாரணம் தொடர்பில் ஆராயப்படும் - ஹர்சன

(கொழும்பு)

பாராளுமன்ற ஓய்வூதியம் நிறுத்தப்படுவதால் பாதிக்கப்படும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதேச செயலகங்கள் அல்லது பிற முறைகள் மூலம் கோரிக்கை விடுத்தால், அரசாங்கம் அவர்களுக்கு ஏதேனும் நிவாரணம் வழங்க முடியுமா என்பது குறித்து ஆராயப்படும் என அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற ஓய்வூதியம் (நீக்குதல்) சட்டமூலம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை பாராளுமன்றத்தில் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதிய உரிமையை இரத்து செய்யும் சட்டம் தற்போது உத்தியோகபூர்வமாக நிறைவேற்றப்பட்டு நாட்டின் சட்டமாக மாறியுள்ளது.

இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதன் மூலம் இனி வரும் காலங்களில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படமாட்டாது.



தற்போது பாராளுமன்றத்தில் உள்ள உறுப்பினர்களுக்கு எதிர்காலத்தில் ஓய்வூதியம் கிடைக்காது என்பதுடன், இதுவரை ஓய்வூதியம் பெற்று வந்தவர்களுக்கும் அதனைத் தொடர்ந்து பெறுவது தடை செய்யப்பட்டுள்ளது.

ஐந்து வருடங்கள் மாத்திரம் சேவையாற்றிவிட்டு, எவ்வித நிதிப் பங்களிப்பும் இல்லாத ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு எதிராக நிலவிய பொதுமக்களின் எதிர்ப்பைக் கருத்திற்கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


இந்தச் சட்டம் எவரையும் பழிவாங்கும் நோக்கம் கொண்டதல்ல, மாறாக ஒரு கொள்கை ரீதியான தீர்மானம் என்று அமைச்சர் தெளிவுபடுத்தியுள்ளார்.

ஓய்வூதியம் நிறுத்தப்படுவதால் சில முன்னாள் உறுப்பினர்கள் பொருளாதார ரீதியாகச் சிரமப்படலாம் என்று எதிர்க்கட்சியினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அவ்வாறு கஷ்டப்படும் உறுப்பினர்கள் இருப்பின், அவர்கள் பிரதேச செயலகங்கள் அல்லது பிற முறைகள் மூலம் கோரிக்கை விடுத்தால், அரசாங்கம் அவர்களுக்கு ஏதேனும் நிவாரணம் வழங்க முடியுமா என்பது குறித்து ஆராயப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமன் ஏக்கநாயக்கவிற்கு பிணை



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்க நாயக்கவை பிணையில் செல்ல கொழும்பு கோட்டை நீதவான் நீதி மன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

அவர் அன்றைய தினம் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்ட நிலையில் இந்த உத்தரவு பிறப்பிக் கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தனிப்பட்ட வெளிநாட்டு விஜயம் ஒன்றிற்காக நிதி அனுமதி வழங்கியதன் மூலம், அந்த குற்றத் திற்கு உடந்தையாக இருந்ததாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டின் பேரில் சமன் ஏக்கநாயக்க விளக் கமறியலில் வைக்கப் பட்டிருந்ததுடன் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் கடந்த 11ஆம் திகதி உத்தர விட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. (நி)

## இனப் பாகுபாட்டிற்கு தீனி போடும் அரசியல்வாதிகள்

### இவர்களுக்கு எதற்கு சலுகைகள்?

(கொழும்பு)..................

**"வங்குரோத்தடைந்த அரசியல் வாதிகள் நாட்டில் மீண்டும் இனவாதம் மற்றும் மதவாதத்தை தூண்டுவதற்கு முற்படுகின்றனர். இதற்கு ஒருபோதும் இடமளிக்கப் படமாட்டாது. இவ்வாறு கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்."**




பாராளுமன்றத்தில் நடை பெற்ற விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"இலங்கையில் காலகால மாக இனவாதப் பிரச்சினைகள் மேலோங்கியே காணப்பட்டன. தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் வஞ்சிக்கப்பட்டனர். ஒடுக்கு முறைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

எனினும், பாராளுமன் றத்தில் சலுகைகளைப் பெற்றுக்கொண்டு வாழ்ந்த அரசியல் வாதிகள் இன நல்லிணக் கத்தை மற்றும் மத நல்லிண க்கத்தை ஏற்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வில்லை.

மாறாக இனரீதியான பாகு பாட்டுக்கு தீனி போடுபவர் களாகவே செயற்பட்டனர். இப் படியானவர்களுக்கு மக்களின் வரிப்பணத்தில் சலுகைகள் எதற்கு? எனவே, ஓய்வூதியம் தேவை இல்லை" எனவும் அமைச்சர் தெரிவித்தார். (நி-8)

## இந்தியாவுக்கான அமெரிக்க தூதுவரை சந்தித்தார் ஜனாதிபதி அநுரகுமார



(டில்லி)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவிற்கான விசேட பிரதிநிதியும் இந்தியாவுக்கான அமெரிக்க தூதுவருமான செர்ஜியோ கோரை நேற்று புதன்கிழமை காலை புதுடில்லியில் சந்தித் துள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் விசேட அழைப்பின் பேரில், 'செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் தாக்கம்' தொடர்பான மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி திஸாநாயக்க புது டில்லிக்கு சென்றுள்ளார். இதன் போதே இந்தியாவுக்கான அமெரிக்க தூதுவரை சந்தித்துள்ளார். (நி)

## வடக்கு மாகாண சபையின் முகாமைத்துவ சேவைக்கு 114 பேர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைக்கு புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட 114 பேருக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு, கடந்த 12 ஆம் திகதி வியாழக்கிழமை வடக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலக கேட்போர் கூடத்தில் நடை பெற்றது.

வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் தரம் III இற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டதற்கு அமைவாக 7 ஆயிரத்து 510 விண்ணப்பங் கள் கிடைக்கப்பெற்றிருந்தன. அவர்களில் தகுதியான 5 ஆயிரத்து 500 பேர் பரீட் சைக்குத் தோற்றியிருந்தனர். பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் 125 பேர் நேர் முகத் தேர்வுக்கு அழைக் கப்பட்டு, அவர்களில் தகுதி பெற்ற 114 பேருக்கு நியமனக் கடிதங்கள் வழங்கி வைக் கப்பட்டன. (8)

## ரில்வினின் இந்திய விஜயம் கட்சி சார்ந்ததாகும்

### அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவின் இந்திய விஜயம் கட்சி சார்ந்ததாகும் எனவும் அது குறித்து அரசாங்கத்தால் எவ்வித அறிக் கையும் வெளியிடப்படாது என பதில் அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், "அரசியல் கட்சிகளுக்கு வெவ்வேறு நாடுகளிலிருந்து அழைப்பு விடுக்கப் படுவது சாதாரணமானதாகும். ஆளுங்கட்சியானாலும், எதிர்க்கட்சியானாலும் எந்த நாட்டிலிருந்து அழைப்பு விடுக்கப்பட்டாலும் அந்த அழைப்பினை ஏற்று அவர்கள் அந்நாடுகளுக்கு விஜயம் செய்வார்கள்.

அவர்களுக்கான ஏற்பாடு களை அந்தந்த நாடுகள் வழங்கும். மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் இந்திய வெளிவிவகார அமைச்சின் அழைப்பிற்கமையவே அந்நாட்டுக்கு விஜயம் செய்திருந்தார். அது கட்சிசார் விஜயமாகும்.

அந்த அடிப்படையிலேயே கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் குறித்த விஜயம் தொடர்பான ஊடக அறிக்கையையும் வெளியிட்டிருந்தது. எனவே அரசாங்கம் இது குறித்த அறிக்கையை வெளியிடாது" என தெரிவித்தார். (நி)

## பௌத்த பிக்குகள் சிலரின் கருத்துக்களை கவனத்திற்கொள்வதில்லை

### விஜித ஹேரத்



(கொழும்பு)

சில பௌத்த பிக்குகளின் கருத்துக்களை கவனத்திற் கொள்ளப் போவதில்லை என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

சில குறுகிய நோக்கங்களுடன் செயற்படும் சிறிய தொகை பிக்குகள் பல்வேறு கருத்துக்கள் மற்றும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

அவ்வாறான விடயங்களை அரசு அதிகமாக கவனத்தில் கொள்ளவில்லை என தெரிவித்துள்ளார்.

நேற்று அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங் களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அரசாக, பௌத்த சாசனத் தின் நிலைத்தன்மைக்காக மிக உயர்ந்த மட்டத்தில் செயற்பட்டு வருவதாகவும் அவர் தெரி வித்துள்ளார்.

புனித தந்ததாது பொது மக்கள் தரிசிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சமீபத்தில் புத்தரின் புனித பொருட்கள் நாட்டிற்கு கொண்டுவந்து, இந்த நாட்டின் பௌத்த சமயத்தி னருக்கு வணங்கி வழிபட வாய்ப்பு வழங்கப்பட்டது என தெரிவித்துள்ளார்.

மேலும், விகாரைகள் மற்றும் கோவில்களில் உள்ள பிக்குகளின் நலன்கள் தொடர் பாக அரசு விரிவான தலை யீடுகளை மேற்கொண்டு வருகிறது.

அமைச்சரவை கூட்டத் திலும் பிக்குகளின் பெற்றோருக்கு வீடுகள் அமைத்து வழங்கும் தொடர்பான ஆவணம் முன்வைக்கப்பட்டுள்ளது.

எனவே, நாட்டின் பௌத்த கொள்கைகளுக்கும் பௌத்த சமயத்திற்கும் அரசு பெரும் முக்கியத்துவம் அளித்து செயற்படுகிறது.

குறுகிய நோக்கங்களுடன் செயற்படும் சிலர் மேற்கொள் ளும் செயல்களை அரசு அதி கமாக பொருட்படுத்தவில்லை என அமைச்சர் தெரிவித் துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்பின மக்களின் உரிமைக் குரல் உலகை விட்டுப் பிரிந்தது



(வோஷிங்டன்)
அமெரிக்காவின் கறுப்பின மக்களின் உரிமைகளுக்காகவும், சமூக நீதிப் போர் முனையிலும் அரை நூற்றாண்டுக்கும் மேலாகத் தடம்பதித்த ரெவரெண்ட் ஜெஸ்ஸி ஜாக்சன், நேற்று முன்தினம் தனது 84 ஆவது வயதில் காலமானார்.

அவர் சிகாகோவில் உள்ள தனது இல்லத்தில் குடும்பத்தினர் சூழ அமைதியாக உயிர் பிரிந்ததாக அவரது குடும்பத்தினர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1960களில் மார்ட்டின் லூதர் கிங் ஜூனியருடன் இணைந்து சிவில் உரிமைப் போராட்டங்களில் முன்னின்றவர். 1968 இல் கிங் சுட்டுக் கொல்லப்பட்டபோது அவருடன் இருந்தவர்களில் இவரும் ஒருவர். அமெரிக்க ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் பதவிக்காக 1984 மற்றும் 1988 ஆகிய ஆண்டுகளில் போட்டியிட்டு, கறுப்பினத்தவர் ஒருவரால் அமெரிக்க அரசியலில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்பதை நிரூபித்தார்.

இதுவே பிற்காலத்தில் பராக் ஒபாமா ஜனாதிபதியாவதற்கு அடித்தளமாக அமைந்தது.

சமூக நீதி மற்றும் பொருளாதார சமத்துவத்திற்காக "ரெயின்போ புஷ்" என்ற அமைப்பை நிறுவி, ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாகத் திகழ்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(3)

## ஸ்பெயினில் அடுக்குமாடிக் குடியிருப்பில் பயங்கர தீ விபத்து

## ஐவர் உயிரிழப்பு



(மாட்ரிட்)
ஸ்பெயின் நாட்டின் வடகிழக்கு பகுதியில் அமைந்துள்ள கேட்டலோனியா பிராந்தியத்தில் உள்ள ஒரு தொடர்மாடி குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்தில் 5 பேர் உயிரிழந்துள்ளதோடு, 4 பேர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உயிரிழந்தவர்கள் அனைவரும் இளைஞர்கள் எனவும், அவர்களில் சிலர் வயது குறைந்தவர்களாக இருக்கலாம் எனவும் ஸ்பானிஷ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.




பார்சிலோனா நகரத்தின் வடக்கே அமைந்துள்ள ஓசோனா மாவட்டத்தில், சுமார் 21 ஆயிரம் பேர் வசிக்கும் மான்லூ பகுதியில் உள்ள ஐந்து மாடி குடியிருப்புக் கட்டடத்தின் சேமிப்பு அறையில் இந்த தீ விபத்து ஏற்பட்டதாக தீயணைப்பு வீரர்கள் தெரிவித்துள்ளனர்.

தீ விபத்துக்கான காரணம் குறித்து மொசோஸ் டி எஸ்குவாட்ரா எனப்படும் காடலான் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (3)

# ட்ரம்பின் அமை
# இணைந்துக்கொ
## வத்திக்கான் அறி

**(வத்திக்கான்)------------------**
**அமெரிக்க ஜனாதிபதி டொ**
**முன்னெடுத்துள்ள "அமைதித்தி**
**அமைப்பில் இணைந்துக்கொள**
**தில்லை என வத்திக்கான் உத்**
**மாக அறிவித்துள்ளது.**

சர்வதேச நெருக்கடிகளை ஐக்கிய நாடுகள் சபையே கையாள வேண்டும் என்பதை வலியுறுத்தி இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

காசா போர் நிறுத்தத்தைக் கண்காணிக்கவும், அதன் மறுசீரமைப்புப் பணிகளை மேற்பார்வையிடவும் ஜனாதிபதி ட்ரம்ப் இந்த "அமைதித்திட்ட அமைப்பை" உருவாக்கியுள்ளார்.

இந்த அமைப்பில் இணைந்துகொள்ளுமாறு அமெரிக்காவைச் சேர்ந்த முதலாவது பாப்பரசரான 14ஆம் லியோவுக்கு கடந்த ஜனவரி மாதம் அழைப்பு விடுக்கப்பட்டது.

இந்த அமைப்பின் முதலாவது கூட்டம் இன்று வோஷிங்டனில் நடைபெறவுள்ளது. இதில் காசா மறுசீரமைப்பிற்காக 05 பில்லியன் டொலர் நிதி திரட்டுவது தொடர்பில் கலந்துரையாடப்படவுள்

ளது.
வத்தி
லாளர் ச
இது குறி
"வத்தி
போன்ற
அதன் த
அளவில்
நாடுகள்
வேண்டு
யாக உ
அமைப்ப
டோம்."
ட்ரம்
ஐக்கிய

# போதைப்பொருள் கடத்தல் கட
# அமெரிக்க இராணுவம்
## 11 பேர் உயிரிழப்பு

(வோஷிங்டன்)
அமெரிக்க இராணுவம் கரீபியன் மற்றும் கிழக்கு பசுபிக் கடல் பகுதிகளில் நடத்திய ஏவுகணைத் தாக்குதல்களில் 11 பேர் உயிரிழந்துள்ளனர்.


இந்தத் தாக்குதல் சம்பவங்கள் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளன.

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்படும் மூன்று படகுகளே தாக்கப்பட்டதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

கிழக்கு பசுபிக் பகுதியில் தாக்கப்பட்ட முதல் படகில் 4 பேரும், அதே பகுதியில் தாக்கப்பட்ட இரண்டாவது படகில் 4 பேரும், கரீபியன் கடலில் தாக்கப்பட்ட மூன்றாவது படகில் 3 பேரும் கொல்லப்பட்டதாக அமெரிக்க தரப்புக் கூறுகின்றது.

அமெரிக்காவுக்குள் போதைப்பொருள் கடத்தப்படுவதைத் தடுக்க ஜனாதிபதி ட்ரம்ப் நிர்வாகம் "Operation Southern Spear" என்ற பெயரில் இந்த இராணுவ நடவடிக்

கையை
இதன்
முதல் இ
ஏவுகணை
டுள்ளன.
இதில்
1500 பே
தாகத் தர




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ..திதிட்ட அமைப்பில் ..ாள்ளப் போவதில்லை!

## ..றிவிப்பு

..டொனால்ட் ட்ரம்ப் ..திட்டம்" என்ற ..ள்ளப் போவ ..த்தியோகபூர்வ



..த்திக்கான் வெளிவிவகார செய ..ர் கர்தினால் பியட்ரோ பரோலின் குறித்துத் தெரிவிக்கையில்,

..வத்திக்கான் என்பது பிற நாடுகளைப் ..ன்ற ஒரு சாதாரண அரசு அல்ல, ..ன் தன்மை வேறுபட்டது. சர்வதேச ..வில் நெருக்கடி நிலைகளை ஐக்கிய ..கள் சபையே முன்னின்று கையாள ..ண்டும் என்பதில் நாங்கள் உறுதி .. உள்ளோம். எனவே, இந்த ..மைப்பில் நாங்கள் பங்கேற்க மாட் ..ம்."

..ரம்பின் இந்த அமைப்பானது ..கிய நாடுகள் சபையின் அதிகாரத்தைக் குறைக்கும் வகையில் அமைந்துள்ளதாகப் பல நாடுகள் கவலை தெரிவித்துள்ளன.

காசா விவகாரம் குறித்துப் பேசும் இந்த அமைப்பில் பாலஸ்தீனப் பிரதிநிதிகள் எவரும் சேர்க்கப்படவில்லை என்பது மனித உரிமை செயற்பாட்டாளர்களால் கடும் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது.

காசாவில் கடந்த ஒக்டோபர் முதல் நிலவி வரும் போர் நிறுத்தம் மிகவும் பலவீனமாக உள்ளது. இதுவரை நடந்த தாக்குதல்களில் 72,000 இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

அங்கு நிலவும் கடும் பஞ்சம் மற்றும் மனிதாபிமான நெருக்கடி தொடர்பில் பாப்பரசர் லியோ தொடர்ந்து தனது கவலையை வெளிப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (3)

## அமெரிக்கப் பாடசாலையொன்றில் துப்பாக்கிச் சூடு

- 2 பேர் உயிரிழப்பு
- 3 பேர் படுகாயம்



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் ரோட் தீவு மாகாணத்தில் உள்ள படுவெக்கெட் நகரில் உள்ள பனிச்சறுக்கு விளையாட்டரங்கில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூடு அதிர்ச்சியை ஏற்படுத்தி யுள்ளது.

பாடசாலை ஹொக்கிப் போட்டியின்போது இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் 2 பேர் உயிரிழந்ததுடன் 3 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டில் சம்பவ இடத்திலேயே ஒருவரும், மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் மற்றொருவரும் உயிரிழந்தனர்.

அத்துடன் தாக்குதல் நடத்திய நபர் தன்னைத் தானே சுட்டு உயிரிழந்ததாகப் பொலிஸ்த்துறையினர் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த மேலும் மூவர் கவலைக்கிடமான நிலையில் உள்ளூர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது ஒரு திட்டமிடப்பட்ட தாக்குதல் என்றும், குடும்பப் பிரச்சினை காரணமாகவே இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளதாகவும் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (3)

## ..கப்பல்கள் மீது ..தாக்குதல்

..யை முன்னெடுத்து வருகிறது.

..தன்படி, 2025 செப்ரெம்பர் மாதம் .. இதுவரை 40இற்கும் மேற்பட்ட ..ணைத் தாக்குதல்கள் நடத்தப்பட் ..ன.

..தில் இதுவரை சுமார் 145 முதல் .. பேர் வரை உயிரிழந்துள்ள .. தரவுகள் தெரிவிக்கின்றன. (3)



## திருவிழாவின் போது சரிந்து விழுந்த 60 அடி பிரமாண்ட தேர்

### 7 பேர் படுகாயம்

(டில்லி)

இந்தியாவின் தமிழ் நாட்டு வேலூர் மாவட்டத்தில் ஆண்டுதோறும் நடைபெறும் மயான கொள்ளை திருவிழாவின் போது இம்முறை 60 அடி உயர கோயில் தேர் கவிழ்ந்ததில் ஏழு பேர் படுகாயமடைந்தனர்.

இந்த சம்பவம் பாலாறு ஆற்றங்கரையில் நடைபெற்ற ஊர்வலத்தின் போது நடந்துள்ளது.


குறித்த விழா நிகழ்ச்சிகளின் ஒரு பகுதியாக, அலங்கரிக்கப்பட்ட தேர் ஊர்வலமாக இழுத்துச் செல்லப்பட்டுக் கொண்டிருந்த போது திடீரென சமநிலை இழந்து சாய்ந்து விழுந்துள்ளது.

விபத்தில் சிக்கிய பக்தர்களை பொலிஸார் மற்றும் பொதுமக்கள் உடனடியாக மீட்டு அருகிலுள்ள மருத்துவமனைக்கு அனுப்பியுள்ளனர்.

காயமடைந்தவர்கள் அடுக்கம்பாறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக மாவட்ட நிர்வாகம் மற்றும் பொலிஸார் மேலதீக விசாரணை நடத்தி வருகின்றனர்.

பாதுகாப்பு நடைமுறைகள் பின்பற்றப்பட்டதா என்ற கோணத்திலும் விசாரணைகள் நடைபெற்று வருகின்றது. (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிநீர் விநியோகத் திட்டத்தை விரிவுபடுத்த நிதி ஒதுக்கீடு

## அமைச்சர் சுசில் ரணசிங்க

**(கண்டாவளை) ------------------ கிளிநொச்சி மாவட்டத்தில் மக்களின் தேவைகளின் அடிப்படையில் குழாய் வழி குடிநீர் விநியோக நடவடிக்கைகளை விரிவுபடுத்த நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படும் என வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் வைத்திய கலாநிதி சுசில் ரணசிங்க தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சிக்கு கடந்த வாரம் விஜயம் மேற்கொண்ட அமைச்சர் நீர் விநியோக நடவடிக்கைகள் தொடர்பில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடத்திய கலந்துரையாடலின்போது கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கிளிநொச்சி மாவட்டத்தின் எதிர்கால பொருளாதார நலன்கருதி பரந்தன் பகுதியில் அமைக்கப்படவுள்ள முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தின் தேவை கருதியும், முக்கியமாக கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவில் அதிகரித்துவரும் சிறுநீரக பாதிப்புக்களை கருத்திற்கொண்டும் கிளிநொச்சி மாவட்ட நீர் விநியோகத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் புதிய நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல், கிராமங்களுக்கான குழாய்கள் அமைத்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளுக்கு சுத்தமான குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார். (8-315)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1994-இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி-பா-47
9இல்சூரி செவ்
உயரம்:5'8"
தகைமை/தொழில்: PHD, ITWork (Australia)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16545

பிறப்பு:1996-இந்து
நட்சத்திரம்:கேட்டை
கி.பா: 9
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: BSc,MSc,Civil Engineer (Singapore)
எதிர்பார்ப்பு: உயர்தொழில்
தொ.இ: B/16548

பிறப்பு:1995-இந்து
நட்சத்திரம்:கேட்டை
1இல்செவ்
உயரம்:5'5"
தகைமை/தொழில்- BBA, Executive Office
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16549

பிறப்பு: 1979- இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி-பா-73
10இல்சூரிசெவ்
உயரம்:5'8"
தகைமை/தொழில்-PHD, Professor
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்
தொ.இ: B/16550

பிறப்பு: 1997- இந்து
நட்சத்திரம்:திருவோணம்
உயரம்:5'2"
தகைமை/தொழில்: BSc, Engineer
எதிர்பார்ப்பு: உயர்தொழில்
தொ.இ: B/16554

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு:1997-இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
2இல் செவ்
கி.பா: 68
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BBM, MA
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/16556

பிறப்பு :2000 -இந்து+RC
நட்சத்திரம்: சித்திரை
உயரம்: 5'5"
தகைமை/தொழில் - BSc
எதிர்பார்ப்பு - தகுதியான ஆண் (வெளிநாடு)
தொ.இ: G/16557

பிறப்பு-1990-இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 17
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSc, MSc, Research Scientist
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: G/16558

பிறப்பு-1999-இந்து
நட்சத்திரம்-பூரட்டாதி
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BSc, Bank
எதிர்பார்ப்பு - பட்டதாரி
தொ.இ: G/16560

பிறப்பு:1997-இந்து
நட்சத்திரம்:கார்த்திகை
12இல்செவ்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: MSc, Communi cation Designer
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/16564

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 543



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# நல்லவர் யார்?

ஒரு ஊரிலே ஒரு ராஜா இருந்தார். அவர் ஒரு வித்தியாசமான ராஜா, எந்த வகையிலே வித்தியாசமானவர் என்று கேட்டால் மக்களிடம் வரி வசூல் செய்வதிலே கொஞ்சம் வித்தியாசமானவர்.

மற்ற மன்னர்கள் மாதிரி இவர் நேரடியாக வரிவசூல் செய்வதிலே கொஞ்சம் மறைமுகமாக அதைச் செய்வார்.

எப்படி என்றால் ஒவ்வொரு குடிமக்களுக்கும் மாதம் ஒரு மரக்கால் நெல் மக்கள் கொடுக்கிறது இல்லை. ராஜா, மக்களுக்குக் கொடுப்பார்!

அதாவது அரண்மனையிலேயிருந்து ஒவ்வொரு வீட்டுக்கும் நெல் வந்து சேரும். அந்த ஒருமரக்கால் நெல்லை இவர்கள் வாங்கிக்கொண்டு அதற்குப் பதிலாக ஒரு மரக்கால் அரிசியை ராஜாவுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

இதுதான் அந்த ஊர் வழக்கம், ராஜா மக்களுக்கு நெல்லைக் கொடுத்துவிட்டு அதற்குப் பதிலாக அதே அளவு அரிசியாகத் திருப்பி வாங்கிக்கொள்வார்.

இதைத்தவிர வரி ஏதும் வசூல் செய்வதில்லை! இது மேலோட்டமாகப் பார்ப்பதற்கு ஏதோ சாதாரணமாகத் தெரிந்தாலும் குடிமக்கள் ரொம்பவும் கஷ்டப்பட்டார்கள்.

ராஜா கொடுக்கின்ற நெல்லையும் அரிசியாக்க வேண்டும். அதோடு இன்னும் பாதி அரிசியை இவர்கள் சேர்த்தும் கொடுத்தாக வேண்டும். என்ன செய்வது? மக்கள் ராஜாவைத் திட்ட ஆரம்பித்தார்கள்? இந்த ராஜா எப்போது இறப்பார் என்று எதிர்பார்க்க ஆரம்பித்துவிட்டார்கள். பல பேர் அந்த ஊரிலே வீட்டை காலி செய்துவிட்டு வெளி தேசத்திற்குப் போய் விட்டார்கள்.

மக்கள் எதிர்பார்த்த மாதிரியே நடந்தது. அந்த மன்னன். நோய் வந்து படுத்த படுக்கையாகி விட்டான். ராஜா இப்படி சாகக்கிடக்கிறார் என்று தெரிந்தும் மக்கள் யாருமே பார்க்க வரவில்லை.

"ஏன் என்னை யாருமே பார்க்க வரவில்லை?" என்று மந்திரியிடம் கேட்டார் ராஜா. "நம் ஊரிலே மக்கள் எங்கே இருக்கிறார்கள் பார்க்க வருவதற்கு?" என்றார் அவர்.

"ஏன் என்ன ஆனது அவர்களுக்கு?" என்று கேட்டார் இவர்.

அமைச்சர் அப்போதுதான் அரசனுக்கு அவன் செய்த தவறை சுட்டிக்காட்டினார். மக்களுக்கு இழைத்த கொடுமையை எடுத்துச் சொல்லி புரியவைத்தார்.

மன்னருக்கு ஞானோதயம் வந்தது. செய்த பாவங்களை எண்ணி வருத்தப்பட்டான். "மெதுவாக அமைச்சர் பக்கம் திரும்பி" இளவரசன் எங்கே என்று கேட்டார். அவர் எங்கேயாவது ஊர் சுற்றிக் கொண்டிருப்பார். சூதாட்ட விடுதிகளிலே கிடப்பார்" என்றார் அமைச்சர்.

"அவன் எங்கேயிருந்தாலும் உடனே அழைத்துக்கொண்டு வாருங்கள்" என்று உத்தரவு போட்டார் ராஜா.

அடுத்த நாளே இளவரசனைக் கொண்டுவந்து நிறுத்தினார்கள். "தந்தையே என்ன செய்ய வேண்டும் நான் சொல்லுங்கள்" என்று கேட்டார்.

அவர் சொன்னார், "மகனே மக்களுக்கு நான் பொல்லாதவனாகி விட்டேன். அவர்கள் எல்லாம் என்னை நல்லவன் என்று சொல்ல வேண்டும். அப்படி அவர்களை சொல்ல வைக்க வேண்டியது உன்னுடைய பொறுப்பு"

"தந்தையே நீங்கள் கவலைப்படாதீர்கள். உங்களை ரொம்ப ரொம்ப நல்லவர் என்று மக்கள் சொல்லும் படியாக வைக்கிறேன்" என்றான் மகன். அதன்பின் கொஞ்ச நாளிலே மகன் பட்டத்துக்கு வந்தான். வரி வசூல் செய்யும் முறையிலே ஒரு மாற்றத்தை உண்டு செய்தான்.

இவன் என்ன செய்தான். ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு மரக்கால் உமியைக் கொடுத்துவிட்டு அதற்குப் பதிலாக ஒரு மரக்கால் அரிசியை வாங்கினான்.

அப்பா நெல்லைக் கொடுத்துவிட்டு அரிசியாக வாங்கினார். இவன் உமியைக் கொடுத்துவிட்டு அரிசியாக வாங்கினான்.

கொஞ்ச காலம் ஆனது. ஒரு நாள் மந்திரியைக் கூப்பிட்டுக் கேட்டான். அமைச்சரே மக்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள்" என்று விசாரித்தான்.

"உங்கள் அப்பா ரொம்ப ரொம்ப நல்லவர்" என்று பேசிக் கொள்கிறார்கள் என்றார் அமைச்சர்.

எப்படி இருக்கு பாருங்கள் இது? அப்பாவுக்குக் கொடுத்த வாக்கைப் பிள்ளை காப்பாற்றி விட்டான். இந்தக் காலத்திலேயும் இது மாதிரி அப்பாவுக்கு உதவுகின்ற பிள்ளைகள் உண்டு.

ஒரு பிள்ளையிடம் சொன்னான். "நான் என் அப்பாவுக்கு ரொம்ப ரொம்ப உதவியாக இருக்கிறேன்." என்றான்.

"அப்படியா? உங்கள் அப்பா என்ன செய்து கொண்டிருக்கிறார்?" என்று கேட்டேன். "சும்மாதான் இருக்கிறார்" என்றார் அவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத் தடைச்சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும்

## நல்லூர் பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைபினை அமுலாக்கம் செய்யக் கூடாது என்றும் பயங்கரவாதத் தடைச் சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும் என்றும் நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் கொண்டு வந்த பிரேரணை தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்களின் எதிர்ப்புக்கு மத்தியில் சபையின் பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பிரேரணையினை முன்வைத்து தவிசாளர் ப.மயூரன் தெரிவிக்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தினை முற்றாக இல்லாதொழிப்போம் என்ற வாக்குறுதியினை மக்களுக்கு வழங்கி, அதன் மூலம் தமிழ் மக்களினதும் சிங்கள மக்களினதும் வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கம் பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டம் என்ற பெயரில் தற்போது நடைமுறையில் காணப்படும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தினை விட மிக மோசமான பயங்கவரவாத சட்ட வரைபினை முன்வைத்துள்ளது. மக்களினால் தெரிவு செய்யப்பட்ட இச் சபை அம் மக்களுக்கு இடர்கள் ஏற்படுகின்ற விடயங்கள் கொண்டு வரப்படுகின்ற போது அதற்கெதிராக கண்டனக் குரல் எழுப்பவேண்டியதும் எமது மக்களின் எண்ணங்களினை பிரதிபலிப்பவர்களாக நாம் இருக்க வேண்டியது மக்கள் பிரதிநிதிகள் என்றவகையில் எமக்கே உரித்தான கடமையாகும். அக் கடமையினை நன்குணர்ந்து அரசாங்கத்தினால் முன் மொழியப்பட்டுள்ள பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாது காக்கும் சட்டவரைபினை அமுலாக்கம் செய்யக் கூடாது என்பதனை அச் சபை ஏகமனதாக தீர்மானிக்க வேண்டும்.

அத்துடன் இவ் புதிய சட்ட மூலத்தினை அமுல்படுத்தக் கூடாது என்று எழுகின்ற எதிர்ப்பலைகளை தமக்கு சாதமாகப் பயன்படுத்திக் கொண்டு குறித்த புதிய சட்டமூலத்தினைக் கைவிட்டு பழைய பயங்கரவாதத் தடைச் சட்டத்தினை அப்படியே தொடர்ந்து, தொடரக் கூடிய கபட எண்ணமும் இந்த அரசிடம் காணப்படுகின்றது. எனவே அதை விடுத்து தமிழ் மக் களை மட்டுமல்ல, சிங்கள மக்களையும் குறிப்பாக இன்று பதவியில் இருக்கும் ஜேவிபி அரசாங்கத்தினருக்கும் அன் றைய காலங்களில் பல கொடுமைகளைப் புரிந்த கொடிய பயங்கரவாத தடைச் சட்டம் முற்றாக இல்லாதொழிக்க வேண்டும் என்பதனையும் இச் சபை ஏகமானதாக தீர்மானிக்க வேண்டும் என்றார். (8)

# டைனமைட் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டவர் கைது

(மன்னார்)

மன்னார் ஓலைத்தொடுவாய் கடற்கரை பகுதியில் சட்ட விரோதமாக டைனமைட் வெடிபொருள் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட ஒருவர் மீனுடன் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

ஓலைத்தொடுவாய் பகுதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செயயப்பட்டுள்ளதாக நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். குறித்த நபரிடம் இருந்து டைனமைட் வெடிபொருள் பாவித்து பிடிக்கப்பட்ட சுமார் 450 கிலோ மீன் கைப்பற்றப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட நபர், கைப்பற்றப்பட்ட மீன், வாகனம் ஒன்றும் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (8-285)



# சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண். வடகிழக்கு கலட்டி வீரகத்தி பிள்ளையார் தேவஸ்தானத் தில் சதுர்த்தி உற்சவம் எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ளது. அன்றைய தினம் மு.ப 11 மணிக்கு அபிஷேகம், மூலஸ்தான பூஜை, வசந்த மண்டப பூஜை என்பன நடைபெற்று விநாயகப் பெருமான் திரு வீதி வலம்வரும் காட்சியும் இடம்பெறும் என ஆதீன கர்த்தாவும், பிரதம குருவுமாகிய சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள் அறிவித்துள்ளார். (8)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | .ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 380 | 400 | 400 | 250 | 200 |
| உருளைக்கிழங்கு | 160 | 160 | 150 | 200 | -- | 370 |
| பச்சைமிளகாய் | 300 | 350 | 300 | 300 | 350 | 300 |
| தக்காளி | 150 | 150 | 200 | 240 | 150 | 170 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 200 | 160 | 180 | 100 |
| கோவா | 200 | 200 | 200 | 250 | 200 | 200 |
| கரட் | 250 | 360 | 400 | 300 | 350 | 300 |
| பூசணி | 100 | 100 | 100 | 150 | 100 | 130 |
| புடோல் | 150 | 200 | 150 | 250 | 150 | 150 |
| வாழைக்காய் | 200 | 200 | 150 | 200 | 120 | 180 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300 | 300 | 250 | 230 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 200 | 200 | -- | -- |
| பாகற்காய் | 400 | 500 | 500 | 600 | 350 | 400 |
| வெண்டக்காய் | 250 | 350 | 200 | 400 | 250 | 250 |
| கருணைக் கிழங்கு | 300 | 260 | 200 | 300 | -- | 200 |
| பயற்றங்காய் | 600 | 400 | 400 | 400 | 300 | 320 |
| லீக்ஸ் | 300 | 380 | 400 | 350 | 280 | 260 |
| பீற்றூட் | 300 | 200 | 200 | 250 | 200 | 200 |
| கறிமிளகாய் | 600 | 700 | 600 | 600 | 500 | 650 |
| முருங்கைக்காய் | -- | -- | 4000 | 3000 | 2500 | -- |
| போஞ்சி | 400 | 300 | 400 | 400 | 100 | 300 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | 300 | 250 | -- | -- |
| கீரை - 1 பிடி | 100 | 80-140 | 150 | 120 | -- | 90 |
| தேசிக்காய் | 100 | 100 | 200 | 150 | 150 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 170 | 150 | 120-180 | -- | 120 |
| இராசவள்ளி | 600 | 500 | 400 | 400 | -- | 375 |
| வெங்காயப்பூ | 100 | 80 | 200 | 200 | -- | -- |
| முள்ளங்கி | 100 | 100 | 200 | 200 | 150 | 80 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 150 | 80 | -- | 50 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 100 | -- | 80 |
| ஈரப்பலா | 100 | -- | 100 | 150 | -- | 110 |

# இராசிபலன்

19.02.2026
மாசி 07 , வியாழக்கிழமை
துதியை பிற்பகல் 5.13 மணிவரை
பூரட்டாதி முன்னிரவு 10.05மணிவரை

சுப நேரம் 8.02-9.32 மணிவரை
இராகு காலம் 02.02-3.32 மணிவரை
ரமழான் மாதம் ஆரம்பம்

சந்திராஷ்டமம்
ஆயிலியம், மகம்

வளவன்




எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், புதிய பொறுப்புகள் வந்து சேரலாம், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், சுப விரயங்கள் கூடும் நாள்.




பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், முன்னேற்றத்திற்கான உதவியவர்களை சந்திக்கும் வாய்ப் புண்டு, வாகன சுகமுண்டு, இனிய செய்திகள் இல்லம் தேடி வந்து சேரலாம்.




பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், தொழில் வளர்ச்சி கூடும் நாள், அரசு வழியில் அனுகூலமுண்டு.




மனதில் உற்சாகமும் அமைதியும் கூடும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது.




வாகன பழுதுச் செலவுகள் இடம் பெறலாம், வழிபாட்டில் வளர்ச்சி கூடும், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகலாம்.




குடும்பத்தினரிடையே குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், சுற்றத்தார் வரவால் சுகம் காணும் நாள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கை கூடும், போசன சுகமுண்டு.




தலைமைப் பதவிகள் உங்களைத் தேடி வரலாம், சுப செய்திகள் நாடி வரலாம், எடுத்த காரியங்கள் கை கூடும், உடல் நலன் சீராகும், நன்மைகள் நடைபெறும் நாள்.




சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், சுப செய்திகள் வந்து சேரலாம், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகலாம், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.




பாசம் மிக்கவர்களின் சந்திப்புக்கள் இடம் பெறலாம், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.




தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், சிலர் உங்களைத் தொழில் ரீதியாக உதவி கேட்டு வரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




எதிர்பார்ப்பு நிறைவேறும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், பணப் புழக்கம் கூடும்.




குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் பேசாதிருப்பது நல்லது, திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

எளிமையாக இருப்[illegible] வாழக் கற்றுக் கொடுக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 4

காவியத் தொடர் 982





"இல்லை, நந்தினி! நீ அநாதைப் பெண் அல்ல."

"தனாதிகாரி பழுவேட்டரையர் என்னை மனமுவந்து தம் இளைய ராணியாக அங்கீகரித்தார் ஆனாலும்..."

"அதுமட்டுமல்ல, நந்தினி! எப்படி உன்னிடம் உண்மையைச் சொல்லுவது என்று தயங்குகிறேன்."

"இந்தப் பேதைப் பெண்ணிடம் தாங்கள் எதை வேண்டுமானாலும் தயங்காமல் சொல்லலாம். வழியோடு போகிறவர்கள் எல்லோரும் என்னிடம் ஏதேதோ சொல்லத் துணிகிறார்கள். என்னை வம்புக்கு இழுத்து அவமதிக்கிறார்கள்."

"நந்தினி! இனி அவ்விதம் யாரேனும் நடந்து கொண்டால் என்னால் ஒரு கணமும் பொறுக்க முடியாது. நீ சொல்ல வேண்டியதுதான் அவனை உடனே யமனுலகுக்கு அனுப்பி விட்டு மறு காரியம் பார்ப்பேன்."

"எப்போதும் என்னிடம் தாங்கள் அத்தகைய கருணை காட்டி வந்திருக்கிறீர்கள். பழையாறை இளைய பிராட்டியோடு கூட எனக்காகச் சிறு பிராயத்தில் சண்டை பிடித்திருக்கிறீர்கள் அவர் தங்கள் சகோதரி"

"நந்தினி! நீயும் என் சகோதரி தான்! இளைய பிராட்டியைப் போல நீயும் என் சகோதரி. நான் உன் சகோதரன்!"

"கோமகனே! நான் இன்னொருவரை மணந்ததிலிருந்து என்னைத் தங்கள் சகோதரியாகப் பாவிக்கிறீர்கள். அது தங்கள் குலத்தின் பெருமைக்கு உகந்தது தான். ஆனால் சக்கரவர்த்தியின் திருக்குமாரரை, மூவுலகும் ஆளப் பிறந்த வரை, நான் எவ்வாறு என் சகோதரராகக் கருத முடியும்?"

"நான் சொல்வதை நீ சரியாகப் புரிந்து கொள்ளவில்லை நந்தினி! உண்மையாகவே நீ என் சகோதரி மூவுலகும் ஆளும் சக்கரவர்த்தியின் திருக்குமாரி!"

இதைக் கேட்ட நந்தினி கலகலவென்று சிரித்தாள்.

"தங்களுடைய சித்தம் குழம்பியிருக்கிறதா, எனக்குத்தான் பைத்தியம் பிடித்திருக்கிறதா, தெரியவில்லை!" என்று கூறினாள்.

"சித்தப்பிரமையும் இல்லை! பைத்தியமும் இல்லை." "அப்படியானால், இந்தப் பேதையைப் பரிகாசம் செய்கிறீர்களா?"

"என்னைப் பார்த்துச் சொல், நந்தினி! உண்மையாகவே உன்னைப் பரிகசிப்பவனாகத் தோன்றுகிறதா?"

"ஐயா! தாங்கள் என் முகத்தைப் பார்த்துச் சொல்லுங்கள்! என்னைப் பார்த்தால், சக்கரவர்த்தியின் திருக்குமாரி என்று தோன்றுகிறதா? இராஜகுலத்தின் இலட்சணம் என் முகத்திலே விளங்குகிறதா?"

"நந்தினி! நீ ஐந்து வயதுப் பெண்ணாக இருந்தது முதல் உன் முகத்தை பார்த்திருக்கிறேன். உன் முகத்தில் ஜொலித்த இணையில்லாத சௌந்தரியத்தைக் கண்டு வியந்திருக்கிறேன். அதற்குக் காரணம் மட்டும் இப்போது தான் தெரிந்தது.

காஞ்சியிலிருந்து புறப்பட்ட பிறகு நடுவழியிலே தான் தெரிந்தது. சோழகுலத்தில் வாழ்க்கைப்பட்டவர்களிலே வைதும் பராஜன் மகள் கலியாணிக்கு இணையான அழகுடையவர் யாரும் இல்லை என்பது உலகப் பிரசித்தம்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## திருந்து; அதன்பின் திருத்து



ஒரு மூதாட்டி தன் பேரனின் கையைப் பிடித்துக் கொண்டு தள்ளாடியபடி அறிஞர் அலியிடம் வந்தாள்.

"ஐயா! இவன் என் பேரன். இவனிடம் இனிப்பு சாப்பிடும் பழக்கத்தை விட்டுவிடு என்று எத்தனையோ முறை சொல்லி விட்டேன். இவன் கேட்கவே இல்லை. உங்கள் மீது இவன் பெரு மதிப்பு வைத்திருக்கிறான்.

நீங்கள் சொன்னால் இப் பழக்கத்தை விட்டுவிடுவான். அதற்காகத்தான் இங்கே வந்தேன்" என்றாள்.

இதைக் கேட்ட அலி, "அம்மா! இப்பொழுது வீட்டிற்குச் செல்லுங்கள். நாளை இந்நேரத்திற்கு இங்கு வாருங்கள்" என்று சொல்லி அனுப்பி வைத்தார்.

மறுநாள் அவர் சொன்ன படியே மூதாட்டி தன் பேரனுடன் அங்கு வந்தாள். ஆனால் அலிஅவர்கள் மீண்டும் அந்த மூதாட்டியை நாளை வருமாறு சொன்னார்.

இப்படியே ஒரு வாரம் சென்றது. அந்த மூதாட்டியும் சோர்வின்றித் தன் பேரனுடன் நாள்தோறும் அங்கு வந்து கொண்டிருந்தாள்.

எட்டாம் நாள் மூதாட்டி பேரனுடன் வந்திருந்தாள். பேரனை அருகே அழைத்த அலி அவர்கள், "தம்பி! இனிப்பு சாப்பிடுவதை விட்டுவிடு" என்று சொல்லிவிட்டுத் தம் வேலையில் ஆழ்ந்தார்.

"இப்படிச் சொல்வதற்காகவா நம்மை ஒரு வாரமாக அலைக்கழித்தார்" என்று நினைத்த மூதாட்டி "ஐயா! இதைத் தாங்கள் முதல் நாளே சொல்லி இருக்கலாமே" என்று கேட்டாள்.

அதற்கு அலி அவர்கள், "அம்மா! எனக்கும் இனிப்பு சாப்பிடும் பழக்கம் இருந்தது. நீங்கள் சொன்ன மறுநாள் இப்பழக்கத்தை விட முயன்றேன்.

ஆனால் முடியவில்லை. நேற்றுதான் என்னால் விட முடிந்தது. இப்பழக்கத்தை யார் நினைத்தாலும் விட்டுவிடலாம் என்ற நம்பிக்கை எனக்கு அதன் பிறகுதான் ஏற்பட்டது.

ஆகவே இன்று உங்கள் பேரனை அழைத்து அறிவுரை கூறினேன். இதுதான் தாமதத்திற்கு காரணம்" என்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பணிவுடன் கூடிய திறமையே மனித குலத்திற்கு உண்மையில் பயனுள்ளதாகும்.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆளுமைகளை உருவாக்க வேண்டும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 40 ஆவது பட்டமளிப்பு விழா இன்று ஆரம்பமாகித் தொடர்ந்து நான்கு நாட்கள் நடைபெறும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஐம்பது ஆண்டு கால வரலாற்றில் இன்றுடன் 40ஆண்டுகள் பட்டமளிப்பு விழா நடந்தாகிறது.

40 ஆண்டுகளில் பட்டம் பெற்றவர்கள் தொகை பற்றிய கணக்கெடுப்புகள் நடந்தால், அதன் முடிவுகள் ஆச்சரியமாக இருக்கும்.

நல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தில் 40ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறுகின்ற அனைவரையும் வாழ்த்துகின்றோம். பாராட்டுகின்றோம்.

அதேவேளை பட்டம் பெற்றவர்கள் வேலையற்ற பட்டதாரிகள் என்ற பட்டியலில் சேரப் போகிறார்கள் என்பதுதான் வேதனைக்குரியது.

ஆம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தின் வெளியீடு என்பது அரச வெற்றிடத்தை இட்டு நிரப்புகின்ற பணியாளர்களை வழங்கும் தொழில் வங்கி போல இருக்கிறதே தவிர, விஞ்ஞானிகளை – ஆய்வாளர்களை – புதிய கண்டுபிடிப்புகளில் ஈடுபடுபவர்களை – தொழிலதிபர்களை – முயற்சியாளர்களை – முதலீட்டாளர்களை – ஏற்றுமதி, இறக்குமதி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றவர்களை உருவாக்கவில்லை என்ற உண்மையை ஏற்றுத்தானாக வேண்டும்.

ஆம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தில் இருந்து பட்டம் பெறுகின்ற மருத்துவர்கள், பொறியியலாளர்கள் மற்றும் சட்டத்தரணிகளைத் தவிர, ஏனையவர்கள் ஆசிரியர்களாக – முகாமைத்துவ உதவியாளர்களாக நியமனம் பெறுவதைத் தவிர, வேறு எந்தத் தொழில் முயற்சியிலும் அவர்கள் ஈடுபடுவதில்லை.

ஏன்? யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஒரே கல்வியாண்டில் கற்றுப் பட்டம் பெற்ற பட்டதாரிகள் ஒன்றிணைந்து கம்பனிகளை உருவாக்கி தொழில் முயற்சிகளில் ஈடுபடலாம் என்றால், அதற்கு இம்மியும் இடமில்லை.

ஆக, அரசாங்கம் வேலை வழங்கும் வரை வேலையில்லாப் பட்டதாரிகளாக இருக்கின்ற அளவிலேயே யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தின் வெளியீடு *(Output)* உள்ளது என்ற உண்மையை நாம் மறுதலிக்க முடியாது.

ஆக, பட்டச்சான்றிதழ்கள் பெறுமதியானவை. அந்தப் பெறுமதியை எடுத்தியம்புவதுதான் பட்டமளிப்பு விழா.

ஆக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வழங்குகின்ற பட்டம் – அந்தப் பட்டத்தைப் பெற்றுக் கொள்கின்ற நம் பட்டதாரிகள் எங்கள் தாயகத்தின் உயர்வுக்கு, அபிவிருத்திக்கு, வேலைவாய்ப்புக்கு, தொழில் முயற்சிகளுக்கு பங்களிப்புச் செய்பவர்களாக ஆக்கப்பட வேண்டும்.

இதைவிடுத்து அரச நியமனம் – மாதச் சம்பளம் – வெளிமாவட்டங்களில் கடமையாற்ற மறுப்பு பின்னர் ஓய்வு என்பதாக வாழ்க்கை அமையுமாயின், பெற்ற பட்டத்தால் – நான்கு ஆண்டுகள் நம் பேராசிரியப் பெருமக்கள் வழங்கிய கல்வியால் பயனேதும் உண்டோ சொல்மினே!

## நீர்வெறுப்பு நோயினால் கடந்த ஆண்டு 14 பேர் மரணம்

2025ஆம்ஆண்டில் நீர்வெறுப்பு நோயினால் 14 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவின் விசேட வைத்தியர் அத்துலலியனபத்திரன தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே வைத்தியர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

2030 ஆம் ஆண்டாகும்போது இந்நாட்டு மக்கள் நீர்வெறுப்பு நோயினால் உயிரிழக்காத நிலையை உருவாக்குவதற்கு எதிர்பார்ப்பதாகவும் உலக சுகாதார ஸ்தாபனம் இலக்கு வைத்துள்ளதைப் போன்று, உலக சமூகமாக இந்த இலக்கு காணப்படுவதாகவும் அவர் கூறினார்.

இந்த நீர்வெறுப்பு நோயானது பாலூட்டும் விலங்குகளிடமிருந்து வைரஸ் மூலம் பரவும் ஒரு நோய் எனவும், இது நூறு சதவீதம் மரணத்தை ஏற்படுத்தக்கூடிய நோய் எனவும்,

உலகில் மிகக் குறைந்த அளவிலானோரே இந்த நோயிலிருந்து உயிர் தப்பியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

விசேடமாக இந்த நோய் காரணமாக இளைஞர்களே உயிரிழந்துள்ளதாகவும் சிறு பிள்ளைகளும் இந்த நோய் காரணமாக உயிரிழந்துள்ளதாகவும் இந்த நோய்க்குச் சரியான நேரத்தில் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டால் இதனை முற்றாகத் தவிர்த்துக் கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

கடந்த வருடம் 14 மனித உயிரிழப்புகளே ஏற்பட்டுள்ளன. இலங்கை வரலாற்றில் வருடமொன்றில் மிகக் குறைந்த மனித உயிரிழப்புகள் பதிவானது இதுவேயாகும். ஆனால் இதனை நாம் பூச்சியம் வரை குறைத்துக் கொள்ள வேண்டும். எதிர்வரும் 3 வருடங்களுக்குள் இதனைச் செய்ய வேண்டும். இந்த மரணங்கள் அதிகளவாக புத்தளம், குருநாகல் மற்றும் இரத்தினபுரி போன்ற மாவட்டங்களிலேயே பதிவாகியுள்ளன.

நாய்கள் மற்றும் பூனைகள் கடிப்பதனாலும் நகங்களால் கீறுவதனாலும் விலங்குகளின் உமிழ்நீர் படுவதனாலும் அதேபோல் தோலில் உள்ள காயங்களை விலங்குகள் நக்குவதனாலும் இந்த நோய் ஏற்படுகிறது. விலங்கு கடித்ததன் பின்னர் ஓடும் நீரில் 15 நிமிடங்கள் கழுவுதல் மற்றும் சவர்க்காரம் இட்டுக் கழுவுதல், உரிய முறையில் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வது என்பன மேற்கொள்ளப்பட வேணடும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ம-7)

## இலவச சட்ட உதவி ஆலோசனை முகாம்

(மன்னார்)

மன்னார் மக்களின் நலன் கருதி இலவச சட்ட உதவி ஆலோசனை முகாமொன்று எதிர்வரும் (21) சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் மாலை 3.30 மணி வரை மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தச் சட்ட ஆலோசனை முகாமில் குடும்ப வன்முறை வழக்குகள், பாலியல் மற்றும் பால்நிலை தொடர்பான பிரச்சினைகள், காணிப் பிணக்குகள் மற்றும் பொருளாதார உரிமை, சுற்றுச்சூழல், சிறுவர் பாதுகாப்பு விசேட தேவையுடையோர் விவகாரம், மூன்றாம் பாலினம் ஆகியவை தொடர்பிலான சட்ட ஆலோசனைகளைப் பெற்றுப் பயணடைய முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## 7 மாதங்களேயான பெண் குழந்தை உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

இருதய மற்றும் நுரையீரலில் ஏற்பட்ட நோயினால் பாதிக்கப்பட்ட ஏழு மாதமேயான பெண் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

நுணாவில் மத்தி சாவகச்சேரியைச் சேர்ந்த நிரூபன் ரெஸ்மிகா என்ற குழந்தையே உயிரிழந்ததாகும்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (17) காலை யாழ். போதனா வைத்தியசாலையில் கிளினிக்கில் அனுமதிக்கப்பட்ட குழந்தை நண்பகல் உயிரிழந்துள்ளது.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை சாவகச்சேரிப் பொலிஸார் நெறிப்படுத்தினர். (ம-7,60)

சண்டிலிப்பாய்ப் பகுதியில்

## மரண வீட்டில் மயங்கி விழுந்த பெண் மரணம்

சண்டிலிப்பாய் பகுதியில் மரண வீடு ஒன்றில் மயங்கி விழுந்த வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அளவெட்டி கிழக்கைச் சேர்ந்த கந்தையா சூரியமலர் (வயது -76) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (17) அதிகாலை மரண வீட்டில் அவர் மயங்கி விழுந்த நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## திரிபோஷா விநியோகம் மீண்டும் வழமைக்கு

போஷாக்கு குறைப்பாடுள்ள குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்படும் திரிபோஷா விநியோகம் சுமார் நான்கு மாதங்களாகச் செயலிழந்திருந்த நிலையில் மீண்டும் திரிபோஷா விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை திரிபோஷா நிறுவனத்தின் தலைவர் அமல் அத்த நாயக்க தெரிவித்தார்.

இதன்படி ஜனவரி மாதம் மேல் மாகாணத்தின் தேவைக்ளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட 250 மெட்ரிக் தொன் சோளத்தைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட திரிபோஷா இருப்பு ஏற்கெனவே கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்டங்களில் உள்ள சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

கூடுதலாக தேர்ந்தெடுக்கப்பட்ட பல மாவட்டங்களில் திரிபோஷா விநியோகம் தொடங்கப்பட்டுள்ளதாக தலைவர் உறுதிப்படுத்தினார்.

சோளத்தை கொள்முதல் செய்வதில் உள்ள சிரமம் காரணமாக, தற்போது கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் 3 முதல் 5 வயது வரையிலான தேர்ந்தெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

6 மாதங்கள் முதல் 3 வயது வரையிலான குழந்தைகளுக்குத் தேவையான திரிபோஷாவை உற்பத்தி செய்வதற்கான மாற்று முறையாக நெல் சந்தைப்படுத்தல் சபை மூலம் வெள்ளை பச்சரிசியைப் பெறுவது குறித்து கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ன என்று குறிப்பிட்டுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடாவடிக் கோட்டை

## அமெரிக்க உளவுத்துறை சிஐஏ வரலாறு

26

என்.சொக்கன்

அப்போது பல பில்லியன் டொலர்கள் மதிப்புள்ள செயற்கைக்கோள்களை சிஐஏ பயன்படுத்திக்கொண்டிருந்தது. வானத்திலிருந்து மட்டுமல்ல. தண்ணீருக்குள்ளும் சென்று பார்க்கக்கூடிய உபகரணங்கள் அவர்கள் வசம் இருந்தன.

இதனால், உலகம்முழுவதும் சிஐஏவுக்குக் கண்கள் உண்டு. நீங்கள் மொட்டை மாடியில் துண்டு உலர்த்துவதில் தொடங்கி, சாலைகள், பாலங்கள், இராணுவ நடவடிக்கைகள், அறிவியல் ஆராய்ச்சிகள், தீவிரவாதிகளின் நடமாட்டங்கள், போதைப் பொருள் கடத்தல் என்று சகலத்தையும் அவர்களால் கண்காணிக்கமுடியும்.

இந்தச் செயற்கைக் கோள்கள் ஒவ்வொரு நாளும் ஆயிரக் கணக்கான புகைப்படங்களைக் கொண்டுவந்து குவிக்கின்றன. இவற்றை நிதானமாக உட்கார்ந்து ஆராய்வதற்காகவே, சிஐஏவில் NPIC(National Photographic Interpretation Center)என்று ஒரு தனிப் பிரிவு இருக்கிறது.

ஆரம்ப காலத்தில், சோவியத் யூனியனின் ஆயுத ஆராய்ச்சிகளை அடையாளம் காண்பதற்காக உருவாக்கப்பட்ட பிரிவு இது. சோவியத் எல்லையினுள் வேவு விமானங்கள் அல்லது செயற்கைக் கோள்கள் பல நேரங்களில், வெவ்வேறு கோணங்களில் எடுத்து அனுப்பிய புகைப் படங்களை, பூதக் கண்ணாடி சகிதம் உட்கார்ந்துகொண்டு ஆராய்வார்கள்.

அதன்பிறகு, புகைப்படங்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. அதையெல்லாம் அலசி ஆராய்வதற்கான கம்ப்யூட்டர் சாஃப்ட்வேர்களும் வந்துவிட்டன.

ஒரு வெறும் புகைப்படங்களை வைத்துக்கொண்டு என்ன பெரிதாக ஆராய்ந்துவிடமுடியும் என்று நினைக்காதீர்கள். ஒரு சில புகைப் படங்களின் அடிப்படையில் ஒரு நகரத்தின் குத்துமதிப்பான மக்கள் தொகை, வீடுகளின் அமைப்பு, கலாசார முறைகள் அது தொழிற்சாலைகள் நிரம்பிய பகுதியா அல்லது மக்கள் அதிகம் வாழ்கிற பகுதியா என்றெல்லாம் துல்லியமாகக் கண்டு பிடித்துவிடக் கூடிய கில்லாடிகள் சிஐஏவில் உண்டு.

அதுமட்டுமில்லை, "இன்ஃப்ரா-ரெட்" (InfraRed) எனப்படும் அகச் சிவப்புக் கதிர்களைச் சரியான முறையில் பயன்படுத்தினால், அதே புகைப்படங்களில் இருந்து வேறு சில விபரங்களையும் தோண்டியெடுப்பது சாத்தியம். அந்தப் புகைப்படங்கள் எடுப்பதற்குச் சற்று முன்னால் என்ன நடந்தது என்பதைக்கூட சிஐஏவால் ஓரளவு சரியாகவே ஊகித்துவிட முடியும்.

ஒருவேளை, இப்படிக் கண்ணால் பார்ப்பது ஏமாற்றினால்? அதற்காகதான், காதால் கேட்கும் விடயங்களையும் திரட்டுகிறது சிஐஏ. நண்பர்கள், எதிரிகள், வம்புக்



காரர்கள், சாதுக்கள் என்று எந்த வித்தியாசமும் பார்க்காமல், எல்லா தேசங்களிலும் முக்கியமான அலுவலகங்களை ஒட்டுக் கேட்கிறார்கள்.

இப்படி உலகம்முழுக்கப் பல அலுவலகங்களையும், அவற்றின் தொலைபேசி இணைப்புகளையும் சிஐஏ வழிமறித்துக் கேட்டுக் கொண்டிருக்கிறது. இதனால், இரகசியப் பேச்சுவார்த்தைகள், ஆக்கிரமிப்புத் திட்டங்கள் என்று சகலத்தையும் முன் கூட்டியே தெரிந்து கொண்டு விடுகிறார்கள்.

இதற்கு பயந்துதான், ஃபிடல் காஸ்ட்ரோ போன்ற பல தலைவர்கள். முக்கியமான விடயங்களைத் தொலைபேசியில் பேசுவதைத் தவிர்க்கிறார்கள். வேறு பல அலுவலகங்களில், ஒட்டுக் கேட்க முடியாத விசேஷ அறைகள் அமைக்கப் பட்டிருக்கும்.

சரி. போகட்டும் என்று சிஐஏ சும்மா இருந்துவிடுவதில்லை. வேறு பல புதுப்புது தொழில் நுட்பங்களைக் கண்டறிந்து. இந்த "முன் ஜாக்கிரதை முத்தண்ணாக்களையும் மடக்குவதற்கான புதிய வழிகளைத் தேடிய படி இருக்கிறார்கள்.

சிஐஏ உளவாளிகள், ஒற்றர்களுக்குத் தேவைப்படும் நவீன கருவிகள், உபகரணங்களைத் தயாரிப்பதற்காகவே, தனியாக ஓர் அறிவியல் தொழில்நுட்பப் பிரிவை உருவாக்கியிருக்கிறார்கள். அதன் பெயர், The Directorate Of Science And Technology.

பல ஊடகங்களில், சிஐஏ என்று சொன்னதும், "ஜேம்ஸ் பாண்ட் 007"இன் பொம்மை காட்டுவார்கள், அல்லது பாண்ட் படங்களில் வருகிற தீம் ம்யூசிக்கை இசைப்பார்கள்.

இந்த பிம்பம், சிஐஏவுக்குப் பிடிக்கவில்லை. "துப்பறியும் கதைகள், சினிமாக்களில் வருவதையெல்லாம் அப்படியே நம்பிவிடாதீர்கள். எங்களுக்கும் ஜேம்ஸ் பாண்டுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை" என்று சிஐஏவின் பல இயக்குநர்கள் கரடியாகக் கத்திக் கொண்டிருக்கிறார்கள்.

உண்மையில், ஜேம்ஸ் பாண்ட் படங்களில் வருவதைக் காட்டிலும் பிரம்மாண்டமான, நம்ப முடியாத தொழில் நுட்பங்களையெல்லாம் சிஐஏவின் அறிவியல் பிரிவு உருவாக்கிக்கொண்டிருக்கிறது.

ஆனால் இதையெல்லாம் வெளியே சொல்லிக்கொண்டிருந்தால், உளவுப் பணிகள் பாதிக்கப்படுமில்லையா? அதனால்தான். தங்களுடைய கண்டுபிடிப்புகளைப் பகிரங்கமாக்காமல் அடக்கி வாசிக்கிறார்கள்.

யாருக்கும் தெரியாதபடி இரகசியமாகப் பொருத்தக்கூடிய ஒட்டுக் கேட்கும் கருவிகள், கமராக்கள். இருட்டிலும் தெளிவாகப் பார்க்க உதவுகிற எலக்ட்ரானிக் சாதனங்களில் தொடங்கி, விதவிதமான உடைகள், மாறுவேடங்கள், இரகசியத் தகவல்களை எழுதுவதற்கான காகிதங்கள் என்று இந்தப் பட்டியல் நீள்கிறது."

இந்த ஆராய்ச்சிப் பிரிவின் இன்னொரு முக்கியமான நோக்கம். சாதாரணமாக நாம் பயன்படுத்தக்கூடிய பொருள்களில், இரகசிய அறைகளை அமைப்பது.

உதாரணமாக, ஒரு சின்னப் பேனாவுக்குள் இரகசியமாகச் செய்திகளை மறைத்து வைப்பதற்கான துளியூண்டு அறை ஒன்றை உருவாக்கியிருப்பார்கள். வெளிப் பார்வைக்கு. அது ஒரு சாதாரணப் பேனாபோல்தான் தெரியும். ஆனால், சிஐஏ ஏஜெண்ட்கள் அதற்குள் பல விடயங்களை மறைத்துவைத்துக் கடத்தி விடமுடியும்.

பேனாமட்டுமில்லை. உங்களைச் சுற்றிலும் ஒரு பார்வை பார்த்துக்கொள்ளுங்கள். தூண், துரும்பு என நம் கண்ணில் படும் அத்தனையினுள்ளும், சிஐஏவினால் ஒரு இரகசிய அறை உருவாக்கி எதையாவது ஒளித்து வைத்து விட முடியும். சிஐஏவால் திரட்டப்படும் பல தகவல்கள், இப்படி மரத்தினுள் ஒளித்துவைத்த மாமத யானைகளாகத்தான் கை மாறுகின்றன.

இந்த விடயத்தில், சிஐஏதான் உலகின் டாப். இதுபோன்ற ஆராய்ச்சிகளுக்காக ஏகப்பட்ட பணம் செலவிடுவதில், அவர்களை யாரும் நெருங்கமுடியாது. இதனால், எவராலும் தொடமுடியாத பல தொழில் நுட்பங்கள் அவர்களிடம் உண்டு.

பெரும்பாலும், இவற்றை சிஐஏவே தான் வடிவமைத்து, இரகசியமாகத் தயாரிக்கிறது. மிகச் சில தருணங்களில். வெளியாள்களை அனுமதிப்பது உண்டு.

இப்படித் தயாரிக்கப்பட்ட சாதனங்கள், உலகம் முழுவதும் உள்ள சிஐஏ ஏஜெண்ட்களின் தேவைக்கேற்ப அனுப்பப்படுகிறது. அதன்பிறகு, உட்கார்ந்த இடத்தில் சகல தகவல்களையும் சுருட்டிக் கொண்டுவிடலாம். ஆராய்ச்சிதவிர, சிஐஏ ஓர் அச்சகமும் வைத்திருக்கிறது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.பல்கலைக்...

களுக்கும் பட்டங்கள் வழங்கப்பட இருப்பதுடன், 66 உயர் தகைமை மற்றும் தகைமைச் சான்றிதழ்களுடன் ஒருவருக்கு வியாபார நிர்வாகத்தில் சான்றிதழ் அடங்கலாக 3 ஆயிரத்து 252 பேர் பட்டங்களையும் தகைமைச் சான்றிதழ்களையும் பெற்றுக் கொள்ள வுள்ளனர்.

பட்டமளிப்பை முன்னிட்டு இராம நாதன் வீதி ஒரு வழிப்பாதையாக பயன்படுத்தப்படும் என்று அறிவிக் கப்பட்டுள்ளது. (ம-7)

## வடக்கு பேருந்...

யின் தலைவர் எஸ்.விமலேஸ்வரன் இதனைத் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் இதன் மூலம் அரச, தனியார் பேருந்துகளை கண்காணிக்க முடியும் என்று சுட்டிக் காட்டியுள்ளார். (ம-7)

## வேலணை...

முன்வைக்கப்பட்டு, விவாதிக்கப் பட்டதுடன் சில பிரச்சினைகளுக்கான தீர்வுக்கும் அதற்கான பொறிமுறை களும் எட்டப்பட்டன.

இந்நிலையில் உறுப்பினர் செல லப்பா பார்த்தீபனால் பிரஜா சக்தித் திட்டம் தொடர்பில் முன்மொழி வொன்று சபையில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதத்துக்கு விடப்பட்டது.

இதன்போது உறுப்பினர்கள் குறித்த திட்டம் அரசியல் நோக்கம் கொண்டது என்றும், ஜே.வி.பி என்ற தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், அரச ஊழியர்களின் அதிகாரங்கள், சட்டவாக்கங்களை இந்தத் திட்டத்தின் ஊடாக கேள்விக்குறியதாக்குவதாக வும் சுட்டிக்காட்டியிருந்தனர்.

மேலும் "பிரஜா சக்தி" திட்டம் கட்சி யின் இருப்பைத் தக்கவைப்பதற்கான அரசின் ஏற்பாடாக இருக்கின்றதே தவிர மக்களின் வறுமையை ஒழிப் பதற்கான ஏற்பாடாக இருக்கவில்லை.

மேலும் ஊழல் மற்றும் அரசியல் தலையீடுகள், அதிகார மோசடிகள், இடம்பெறொது என்று கூறி ஆட்சிக்கு வந்தவர்கள் இன்று முழுமையாக அத்தனை மோசடிகளையும் ஊழல் களையும் மேற்கொள்கின்றனர் என் றும் சுட்டிக்காட்டியதுடன் இவ்வா றான கட்டமைப்பு அரச அதிகாரி களை மட்டுமல்லாது மக்களையும் விசனமடையவைத்துள்ளதாகவும்குறிப் பிட்டதுடன், பிரதேச சபையின் அதி காரங்களை இல்லாது நீர்த்துப்போக செய்ய முற்படும் இந்தத் திட்டம் வேல ணைப் பிரதேச சபைக்குள் செயற்பட பிரதேச சபை ஒத்துழைப்பை வழங்காது.

அத்துடன் அவ்வாறான கட்டமைப் பின் திணிப்பு சபையின் ஆளுகைக் குள் வருவதை எவ்வகையிலும் ஏற்க முடியாது எனவும் வலியுறுத்தி குறித்த விடயத்தை தீர்மானமாகவும் நிறை வேற்றியுள்ளனர்.

குறித்த பிரேரணைக்கு சபையின் மொத்த 22 உறுப்பினர்களில் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் நால் வர் எதிர்ப்பை வெளியிட்டிருந்த நிலை யில் ஏனைய உறுப்பினர்களின் ஆத ரவுடன் நிறைவேற்றப்பட்டது. (ம-7,104)

## மதுப் போத்தலை...

முன்தினம் செவ்வாய்க்கிழமை (17) இரவு 7.20 மணியளவில் இடம்பெற் றுள்ளது.

ஆசிரியரான குறித்த பெண் வர்த் தக நிலையமொன்றையும் நடத்தி வருகின்ற நிலையில் வர்த்தக நிலை யத்தினுள் புகுந்து பியர் போத்தலை உடைத்து தலை, வயிறு, நெஞ்சுப் பகுதிகளில் சரமாரியாக குத்தி காயத்தை ஏற்படுத்தியுள்ளார்.

ஆபத்தான நிலையில் குறித்த பெண் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

படுகாயத்தை ஏற்படுத்திய கணவர் தப்பியோடியுள்ள நிலையில் மருதங் கேணிப் பொலிஸார் அவரைத் தேடி வருகின்றனர். (ம-7,60)

## சூழலுக்குப்...

செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரை யாடலில் கருத்துத் தெரிவிக்கப்பட் டது.

மண்டைதீவில் அமைக்கப்பட்டு வரும் சர்வதேச கிரிக்கெட் மைதான அபிவிருத்தி தொடர்பான கலந்துரை யாடல் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலை மையில், விளையாட்டுத்துறை அமைச் சின் மேலதிக செயலாளர் எம். பி. என். எம். விக்கிரமசிங்க மற்றும் விளை யாட்டுத்துறை அபிவிருத்தி திணைக் களப் பணிப்பாளர் நாயகம் எஸ். அச் சுதன் ஆகியோரின் பங்குபற்றலு டன் நேற்றுக் காலை 10.00 மணிக்கு மாவட்டச் செயலக அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் தலைமை யுரையாற்றிய அரசாங்க அதிபர், சர்வதேச தரத்திலான கிரிக்கெட் மைதானம் தொடர்பாக ஏற்கெனவே பல ஆரோக்கியமான கருத்தாடல் கள் பகிரப்பட்டுள்ளதாகவும், சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைக்கப் படுவதற்கு கைகொடுப்பதன் ஊடாக அபிவிருத்திகளை மேற்கொள்ள கூடியதாகக் காணப்படும் என வும், அங்குள்ள பாடசாலை அபி விருத்தி மற்றும் வணிக அபி விருத்தி மேலும் அதிகரித்துச்செல் லும் நிலை காணப்படும் என வும் தெரிவித் தார்.

விளையாட் டுத்துறை அபி விருத்தி திணைக்களப் பணிப்பாளர் நாய கம் கருத்துத்தெரி விக்கையில்,

இக்கலந்து ரையாடலின்நோக் கம் யாழ்ப்பாண மாவட்டத்தில்கிரிக் கெட் மைதானம் அமைப்பதன் ஊடாக விளை யாட்டு நகரம் உரு வாக்கப்படும் எனவும், இதனூ டாக பல்வேறு இணைந்த உட் கட்டமைப்பு வசதி கள் அதனுடன் இணைந்த சேவைகள் போன் றவை தொடர் பாக இக்கலந்து ரையாடல் ஏற் பாடு செய்யப் பட்டுள்ளதாக வும், அதனால் சூழலுக்குப் பாதிப் புக்கள் ஏற்படாத வகையில் மத் திய சுற்றாடல் அதிகார சபை கையாளுவதாகவும் இவ் மைதா னத்தை அமைப் பதன் ஊடாக வெளிநாட்டு முத லீடுகளைப் பெற் றுக் கொள்ளக் கூடியதாக இருக் கும் எனவும், வடக்கு மாகாண சபை மற்றும் பிரதேச சபையின் வரு மானங்கள் அதிகரிக்கும் வாய்ப்புகள் காணப்படுவதாகவும் தெரிவித்தார். (ம-7)

## ஐ.எம்.எப்...

இலங்கைக்கு வருகை தந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் முகா மைத்துவப் பணிப்பாளர் கிறிஸ் டலினா ஜோர்ஜிவா பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பு கொழும்பு, அலரி மாளிகையில் நேற்று முன்தினம் (17) இடம்பெற்றது.

இச்சந்திப்பின்போது, அரசாங்கம் முன்னெடுத்து வரும் தற்போதைய பொருளாதார நிலைப்படுத்தல் முயற்சிகளையும், அண்மைக்கால பொருளாதாரச் சவால்கள் மற்றும் இயற்கை அனர்த்தங்களை அரசாங் கம் கையாண்ட விதத்தையும் அவர் பாராட்டியுள்ளதாக பிரதமர் அலுவல கம் தெரிவித்துள்ளார். (ம-7)


மஹஜன சம்பத — திகதி 2026.02.18 — சீட்டிழுப்பு இலக்கம் 6109 — J 0 4 2 5 0 7

அத சம்பத — J 2 5 0 7 — சீட்டிழுப்பு இலக்கம் 0684 — National Lotteries Board

சுப தவசக் — திகதி 2026.02.18 — சீட்டிழுப்பு இலக்கம் 226 — விருச்சிகம் 25 35 59 — 7795

தன நிதானய — திகதி - 2026.02.18 — சீட்டிழுப்பு இலக்கம் - 2139 — R 23 60 74 78 R

மெகா பவர் — திகதி 18/02/2026 — சீட்டிழுப்பு இலக்கம் 2457 — D 10 06 13 56 73

ஜய — திகதி 2026.02.18 — சீட்டிழுப்பு இலக்கம் 0377 — U 1 1 3 5

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4351 — சீட்டிழுப்பு திகதி 18.02.2026 — W 38 60 67 77 — W

ஹந்தஹன — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2026.02.18 — சீட்டிழுப்பு இலக்கம் 1418 — துலாம் 14 29 44 51 துலாம்

சுபிரி வசனா / உத்தியோகபூர்வ முடிவுகள் — 18.02.2026 — வெற்றி வாரம் 0817 — V 7 3 2 2 0 5 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21.636.095.60 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 3083 — சீட்டிழுப்பு திகதி 2026.02.18 — தினம் புதன்கிழமை — 36 38 70 78 W — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 99,569,404.00 — DLB

சனிதா — திகதி 18.02.2026 — வெற்றி வாரம் 5244 — 09 29 59 78 T — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,278,043.60 — DLB

சசிரி — வெற்றி வாரம் 913 — சீட்டிழுப்பு திகதி 18.02.2026 — புதன்கிழமை — 09 28 48 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,823,160.00 — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4795 — சீட்டிழுப்பு திகதி 18.02.2026 — தினம் புதன்கிழமை — 03 09 35 60 — மேடம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,705,165.60 — DLB

லக்பிம — சீட்டிழுப்பு வாரம் 2259 — 18.02.2026 புதன்கிழமை — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — Q 25 35 41 45 52 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.629,855,919.60 — DLB

அட கோடிபதி ADA KOTIPATHI — புதன்கிழமை — வெற்றி வாரம்: 2909 — சீட்டிழுப்பு திகதி: 2026.02.18 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.91,221,488.80 — 24 47 62 63 F — DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-5019) 076 825 7716 (ஆகாஸ்)

மாப்பிள்ளை தேவை

01. இருபாலை, இந்து, 1997, ரோகிணி, IT degree ayurvedic doctor மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (55043)
02. சுன்னாகம், இந்து, 1988, பரணி, MSc(UK), UK citizen மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54543)
03. கரவெட்டி, இந்து, 1988, சுவாதி, Phd in Bio Chemistry, Germany citizen மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54321)
04. சாவகச்சேரி, இந்து, 1994, அஸ்தம், BDS (University of Jaffna), Dental doctor மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54201)
05. இருபாலை, இந்து, 1998, உத்தராடம், HNDA in Accounting மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (49646)
06. அச்சுவேலி, இந்து, 1995, பூசம், B.Com Accountant, Australia citizen மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (43129)
07. அச்சுவேலி, இந்து, 1992, ரோகிணி, BSc(Hons) in biological science மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (41136)
08. கந்தரோடை, இந்து, 2000, திருவாதிரை, Software Engineering மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (35870)
09. இளவாலை, இந்து, 1987, திருவாதிரை, Dentist doctor, canada citizen மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (32087)
10. சுன்னாகம், இந்து, 1995, திருவாதிரை, BSc(Hons) Micro biology, translational data scientist மணப் பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (30662)

நீங்களாகவே எமது website www.thaalee.com இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். (C-5021)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728
076 528 4510

## மோடியைச் சந்திக்கும் ஜனாதிபதி அநுர

# காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தியை விரைவுபடுத்த வலியுறுத்த வேண்டும் சிறீதரன் எம்.பி

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் தற்போதைய இந்திய விஜயத்தின் போது, காங்கேசன்துறை (KKS) துறைமுகத்தின் அபிவிருத்தியை விரைவுபடுத்துவதற்கு முதன்மை முக்கியத்துவம் வழங்க வேண்டும் என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வலியுறுத்தியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் தனது சமூக வலைத்தளத்தில் நேற்றுக் கருத்து ஒன்று வெளியிட்டுள்ளார்.

அதன்படி, இந்திய அரசாங்கம் ஏற்கெனவே 61 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திக்காக வழங்க உறுதிப்படுத்தியுள்ளது.

இந்நிலையில், அதற்கான நிலுவையிலுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) மேலும் தாமதமின்றி இறுதிப்படுத்தப்பட வேண்டும்.

அத்துடன், இந்த ஒப்பந்தம் நீண்ட கால அடிப்படையிலான திட்டமாக அமைக்கப்பட்டு நிலையான வளர்ச்சி, வர்த்தக விரிவாக்கம் மற்றும் பிராந்திய இணைப்பை உறுதிப்படுத்த வேண்டும்.

காங்கேசன்துறை துறைமுகத்தை வலுப்படுத்துவது வடக்கு மாகாணத்தின் பொருளாதார மீட்சியை வேகப்படுத்தி, புதிய வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதோடு இலங்கை - இந்தியா இடையிலான பொருளாதார உறவுகளை மேலும் ஆழப்படுத்தும்.

மேலும், யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் தற்போது 1400 மீற்றராகவுள்ள ஓடுபாதையை 3000 மீற்றராக விஸ்தரித்து, போயிங் மற்றும் எயார்பஸ் போன்ற பெரிய விமானங்கள் தரையிறங்கக் கூடிய வகையில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

தமிழர் தாயகத்தில் நீடித்த பொருளாதார வளர்ச்சியையும் வேலைவாய்ப்புக்களையும் உறுதிப்படுத்துவதற்கு, இத்திட்டங்களில் உடனடி நடவடிக்கை அவசியம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# 716 பேர் கைது

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (17) பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் 716 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.


பொலிஸ் மா அதிபரின் அறிவுறுத்தலின் பேரில் நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்ட விசேட குற்றத் தடுப்பு மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் 29,595 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

இலங்கையில் இருந்து கனடாவிற்கு
கப்பல் மூலம் பொதிகளை அனுப்ப
10-19 Kg - 1000/Kg
20-49 Kg - 900/Kg
50Kg இற்கு மேல் - 800/Kg
DELIVERY 2-3 Months
(C-5020)
V2 TRAVELS 076 822 6244 076 455 0672

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378, 076 097 3127

## மரண அறிவித்தல்



பிறப்பு 22 - 11 - 1945 இறப்பு 18 - 02 - 2026

# வேலாயுதம் நடராசா

கரம்பொன் மேற்கு ஊர்காவற்துறையைப் பிறப்பிடமாகவும் ஏழாலையை வதிவிடமாகவும் கொண்ட வேலாயுதம் நடராசா அவர்கள் நேற்று (18.02.2026) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம் - காமாட்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - அருமை தம்பதியரின் அன்பு மருமகனும் அரியமலர் அவர்களின் அன்புக் கணவரும் மங்களேஸ்வரி, உலகேஸ்வரி, அமரர் திருநாவுக்கரசு, சீதாலட்சுமி, சாரதாம்பிகை, கந்தசாமி ஆகியோரின் சகோதரரும் அரியநாயகம், புனிதமலர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.02.2026) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் :
ஏழாலை. (2066) குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



பிறப்பு 08 - 01 - 1946 இறப்பு 17 - 02 - 2026

# சின்னத்துரை ஆனந்தசெல்வம் (இளைப்பாறிய பொறியியலாளர்)

யாழ்ப்பாணம் ஒட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை ஆனந்தசெல்வம் அவர்கள் கடந்த (17.02.2026) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - பூபதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெபரஞ்சினி அவர்களின் பாசமிகு கணவரும் ஜெபானந்தி (வைத்திய நிபுணர் - யாழ்.மருத்துவ பீடம்), ஜெபானந்தன் (பொறியியலாளர் - UK) ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரதீபன் (Computer Engineer - Australia), மிதிலா (UK) ஆகியோரின் மாமனாரும் ஜொயனா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), ஜெஷான் (UK) ஆகியோரின் பாசமிகு பேரனும் செல்வானந்தேஸ்வரி (கனடா), சர்வானந்தேஸ்வரி (UK) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.02.2026) வெள்ளிக்கிழமை மாலை 2.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

762, பருத்தித்துறை வீதி,
நல்லூர். (2067)
தகவல் :
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.02.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org